# திருவள்ளுவர் காலம் யாது?

டாக்டர் **மா. இராசமாணிக்கனார்**, M.A., L.T., M.O.L., Ph.D.,
தமிழ்ப் பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

செல்வி பதிப்பகம்
காரைக்குடி.

முதற்பதிப்பு டிசம்பர், 1954.
இரண்டாம்பதிப்பு மார்ச், 1956.

ஆசிரியரின் பிற நூல்கள்:

| | |
|---|---|
| தமிழர் திருமணத்தில் தாலி | 1–8–0 |
| கம்பன் யார்? | 1–8–0 |
| சைவ சமயம் | 2–4–0 |
| தமிழ்மொழிச் செல்வம் | 1–8–0 |
| தமிழ் இனம் | அச்சில் |
| இல்வாழ்க்கை | ,, |

O31:6
J6

விலை ரூ. 1–0–0.

அச்சிட்டோர்:- சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி.

# பதிப்புரை

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதியார் வெற்றிமுரசு கொட்டுகிறார். இஃது உண்மை— வெறும் புகழ்ச்சியில்லை. உலகத்து மக்களெல்லாம் அவரவர் தாய்மொழியில் திருக்குறளைஉண்டுயிர்த்து உவகையெய்துகின்றனர்.

இவ்வாறு உலகத்தாருள்ளெலாம் நிலவும் திருக்குறள் எப்பொழுது பிறந்தது, அதன் காலம் யாது என நம்மனோர் அறிய வேண்டவோ? தக்க சான்றுகளுடன் வள்ளுவனார் காலம் யாது என்று, முன்னுக்குப் பின் முரணின்றி, ஓரளவு ஒரு குறிப்பிட்ட காலத்தைக் கண்டறிந்தால்தான், உலகப் பெரும்புகழ் கொண்ட திருக்குறள் தோன்றிய காலத்திலும் அதற்கு முன்னும் இருந்த தமிழகத்து அரசியல், தமிழர் வாழ்க்கை முறை, உழவு, வாணிகம், கைத்தொழில், நாகரிகம், பண்பாடு முதலியவற்றை நாம் அறிந்து பயன்பெறுதல் இயலும்.

இந்தக் கால ஆராய்ச்சியில் ஈடுபட்ட பெரும் புலவர்களுக்குகிடையில் கருத்து வேறுபாடுகள் நிறைந்திருக்கின்றன. பேராசிரியர்கள் ராவ்சாகிப் எஸ். வையாபுரிப்பிள்ளை, தி.பொ. பழநியப்பபிள்ளை, நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் ஆகியவர்களுடைய கருத்துக்களும் ஈண்டு எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. உயர்திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவ்வேறுபாடுகளை நன்கு விளக்கியும்,

திருவள்ளுவர் எப்பொழுது வாழ்ந்தவராகக் கொள்ளுதல் ஏற்புடையது என்பதற்கு இலக்கியங்களோடன்றி வரலாற்றுச் சான்றுகளுடனும் புதுவழி வகுத்தும் எல்லோரும் எளிதில் உணரும்படி ஒரு கட்டுரை வரைந்து தந்திருக்கிறார்கள்.

தமிழ் மாணவர்களும், அறிஞர்களும், அன்பர்களும் படித்துப் பயன்பெற்று நல்ல ஒரு முடிவிற்கு வருதல் வேண்டும் என்பதே முக்கிய நோக்கம். இவ்வரிய ஆராய்ச்சி நூலொன்று எங்கள் செல்வி பதிப்பகத்தின் முதல் வெளியீடாக வெளியிடப் பெற்றதில் பெருமகிழ்வெய்துகிறோம். இந்நூலின் முதற்பதிப்பு செலவாகிச் சில மாதங்களாகிவிட்டன. இந்த இரண்டாவது பதிப்பிற்கும் எல்லோருடைய அன்பையும் ஆதரவையும் விரும்புகிறோம்.

தமிழறிஞரும், நற்பண்பு மிக்கவருமாகிய உயர் திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனுருக்கு எங்கள் வணக்கமும் நன்றியும் உரியவாகுக.

காரைக்குடி
15—3—56.

வீர. சிவராமன்
செல்வி பதிப்பகம்

# முகவுரை

வள்ளுவர் காலம் என்னும் தலைப்புடன் இந்நூலுள் வெளிவந்துள்ள சொற்பொழிவு, மதுரைத் திருவள்ளுவர் கழகத்து ஆண்டுவிழாவில், சென்னை மேற் சட்டசபை உறுப்பினரும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழறிஞர் குழுவின் தலைவரும் ஆகிய திவான்பகதூர் தி. மு. நாராயணசாமிப் பிள்ளையவர்கள் M. A., B. L. தலைமையில் (5—9—1954) என்னால் நிகழ்த்தப்பட்டது.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேராசிரியராக இருந்த திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் B. A., B. L. தாம் பதிப்பித்த ' திரிகடுகமும் சிறுபஞ்சமூலமும் ' என்ற நூலின் முகவுரையில் பல சான்றுகளைக் காட்டித் திருவள்ளுவர் காலம் கி. பி. 5-ஆம் நூற்றுண்டாக இருக்கலாம் என்று முடிவு கட்டினுர்கள். அப்பகுதி முதற் பிற்சேர்க்கையாக இந்நூலில் வெளிவந்துள்ளது.

திருப்பதி ஸ்ரீ வேங்கடேசுவரர் கீழ்க்கலை ஆராய்ச்சிக்கூடத் தலைவரான தி. பொ. பழநியப்ப பிள்ளையவர்கள் M. A. முதற் பிற்சேர்க்கையிலுள்ள கூற்றுக்களைத் தாம் பதிப்பித்த ' திருக்குறள் பொருட்பால்-பரிதியார், காலிங்கர் உரை ' என்னும் நூலின் முகவுரையில் மறுத்து எழுதியுள்ளார்கள். இஃது இரண்டாம் பிற்சேர்க்கையாக இங்குச் சேர்க்கப் பட்டுள்ளது.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் திருவள்ளுவர் காலத்தைப்பற்றி வெளியிட்டுள்ள கட்டுரையைச் 'செந்தமிழ்' 43-ஆம் தொகுதியில் காணலாம்.

இவற்றை மறுத்து டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் M, A., B. L. (D.Litt) செந்தமிழ்த் தொகுதி 45-இல் வெளியிட்டுள்ள கட்டுரை மூன்றும் பிற்சேர்க்கையாக இங்கு இடம் பெற்றுள்ளது. தமது கட்டுரையை இந்நூலில் சேர்த்துக்கொள்ளத் தமது இசைவை அளித்த நாவலர் அவர்கட்கு எனது உளமார்ந்த நன்றி உரியது.

ஆராய்ச்சி மனப்பான்மை உடைய தமிழ் மாணவரும் தமிழறிஞரும் இவை அனைத்தையும் படித்து ஒரு முடிவிற்குவர வாய்ப்பளித்தல் வேண்டும் என்னும் ஒரே நோக்குடன் இவை மூன்றும் இங்குத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. காய்தல் உவத்தல் இன்றி இவற்றைப் படித்து உண்மை காணுவது கற்றறிந்த மாந்தர் கடமையாகும்.

தியாகராசர் கல்லூரி,
மதுரை

மா. இராசமாணிக்கனார்

# உள்ளுறை


1. திருவள்ளுவர் காலம்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் M.A.L.T.M.O.L.Ph.D.

2. பிற்சேர்க்கை I

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் B.A., B.L.

3. பிற்சேர்க்கை II

திரு. தி. பொ. பழநியப்ப பிள்ளையவர்கள் M.A.

4. பிற்சேர்க்கை III

நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M.A., B.L.

# திருவள்ளுவர் காலம்

## சங்க நூல்களின் இறுதிக்காலம்

புறநானூறு முதலிய எட்டுத்தொகை நூல்களும், பத்துப்பாட்டும், சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் காவிய நூல்களும் 'சங்க நூல்கள்' என்று ஒருசார் அறிஞர் கூறுவர். எட்டுத்தொகை நூல்களும் பத்துப்பாட்டும் '**சங்க நூல்கள்**' என்றும், சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்க காலமாகிய கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளையும் அடுத்துச் செய்யப்பட்ட '**சங்கம் மருவிய நூல்கள்**' என்றும் பிறிதொருசார் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

கால ஆராய்ச்சியைப் புரிவோர் மறுக்கமுடியாத வரலாற்று உண்மைகட்கு முதலிடம் தருதல் வேண்டும். அடுத்து, நூலிற் கூறப்படும் சமய உண்மைகட்கும், அகச்சான்றுகட்கும் புறச்சான்றுகட்கும் மதிப்பளித்தல் வேண்டும். இவ்வுண்மைகளை உளங்கொண்டு மேற்சொன்ன இருசார் அறிஞர் கூறும் நூல்களின் 'இறுதிக்கால எல்லை' எதுவாக இருத்தல் கூடும் என்பதை ஈண்டு ஆராய்தல் நலமாகும்.

வட இந்தியாவில் கி. பி. நான்காம் நூற்றுண்டின் முற்பாதியில் பேரரசனுக இருந்த சமுத்திர குப்தன் விந்தமலைக்குத் தென்பால் படையெடுத்து வந்து, அரசர் பலரை வென்றனன் என்றும், அவருள் காஞ்சியை ஆண்ட விஷ்ணுகோபன் என்ற பல்லவன் ஒருவன் என்றும், அக் குப்தனது அல்லகபாத் தூண் கல்வெட்டுக் கூறுகின்றது,[1] அக்காலம் ஏறத்தாழக் கி. பி. 340–350 என்னலாம்.[2] இதனுல், கி. பி. 3-ஆம் நூற்றுண்டின் இறுதியில் தமிழகத்தின் வட பகுதியாகிய தொண்டை மண்டலம் பல்லவர் என்ற அரச மரபினர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பது திட்டமாகத் தெரிகிறது.[3]

காஞ்சியிலிருந்து முதன் முதல் பட்டயம் விடுத்த சிவஸ்கந்தவர்மன் என்ற முதற்பல்லவன் ஏறத்தாழக் கி. பி. 3-ம் நூற்றுண்டினன் என்று ஒருசார் ஆராய்ச்சியாளர் கூறுவர்.[4] பிறிதொரு சார் ஆராய்ச்சியாளர் வேறு சில காரணங்களைக் காட்டிச் 'சிவஸ்கந்தவர்மனே காஞ்சியைக் கைப் பற்றிய குமாரவிஷ்ணு; அவன் காலம் ஏறத்தாழக் கி. பி. 325—350' என்பர்.[5] வேருெருசார் ஆராய்ச்சியாளர் வேறு சில காரணங்களைக் காட்டிச் சிவஸ் கந்த வர்மன் காலம் ஏறக்குறையக் கி. பி. 300—325

---

1. Pallavas of kanchi by R. Gopalan, Appendix No. 7.
2. Ibid. p 33.
3. Pallavas of Kanchi by R. Gopalan, pp. 35—36.
4. Ibid p. 36.
5. Studies in Pallava History by Fr. H. Heras, pp. 9—14, 22.

என்பர்.[6] இவையனைத்தையும் காண, தொண்டை நாட்டில் பல்லவராட்சி ஏறத்தாழக் கி. பி. 300-இல் தொடங்கியிருக்கலாம் என்று கொள்வது பொருத்த மாகும்.

சுமார் கி. பி. 300-இல் தொண்டை நாட்டைக் கைப்பற்றி ஆளத்தொடங்கிய பல்லவர் கி. பி. 900 வரையில் தென்னிந்தியாவில் பேரரசராக இருந் தனர், அடிக்கடி சேர, சோழ, பாண்டியரோடு போரிட்டனர் என்பன வரலாறு கண்ட உண்மை கள் ஆகும். ஏறத்தாழக் கி. பி. 575 முதல் 900 வரை அப் பல்லவர் பேரரசு கிருஷ்ணை முதல் காவிரி வரையிலும் பரவியிருந்தது.[7] இங்ஙனம் பல நூற் றுண்டுகளாகத் தமிழகத்தில் இருந்த பல்லவரைப் பற்றி மிகப் பழைய தமிழ் நூல்கள் என்று கருதப் படும் மேற்சொன்ன தொகை நூல்களிலும், காவி யங்களிலும் ஒரு குறிப்பும் காணப்படவில்லை.[8] சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரண்டு காவியங்களும் காஞ்சியைப் பற்றிப் பல இடங்களில் குறித்தாலும், பல்லவ அரசருள் ஒருவரைப் பற்றி யேனும் குறிப்பிடாதது கவனிக்கத்தக்கது. இஃது ஒன்றே இக்காவியங்கள் பல்லவர்க்கு முற்பட்டவை என்பதை நன்கு விளக்குவதாகும்.[9]

"கி. பி. 300 முதல் 550 வரையில் தென்னாட்டு வரலாற்றின் இருண்ட காலம் என்று கூறலாம்.

6. Successors of the Satavahanas by D. Sircar, pp. 164—166, 247—248.
7. Pallavas of Kanchi, pp. 83—84—142.
8. Pandyan Kingdom by K. A. N. Sastry, p. 19.
9. V. R. R. Dikshitar's Int to Silappadikaram by R. K. S, p. 13.

இது சங்க காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட இருண்ட காலம். இவ்விருண்ட காலத்தில் அளப்பரிய அதி ராஜர்களை முடி துறக்கச் செய்து களப்பிரர் என்னும் இனத்தார் தமிழகத்தை ஆண்டதாகத் தெரி கிறது.[10] அவருள் அச்சுத விக்கந்தன் என்னும் அரசன் சோழ நாட்டை ஆண்டு, பௌத்த சம யத்தை நன்கு ஆதரித்ததாக, ஏறத்தாழக் கி. பி. 450-இல் வாழ்ந்த புத்த தத்தர் என்ற பௌத்த நூலாசிரியர் தம் நூல்களில் குறித்துள்ளார்.[11] இவ்வாறு தமிழரசரை முடிதுறக்கச் செய்த களப் பிரர் ஆட்சி வடக்கே சிம்மவிஷ்ணு பல்லவனாலும், தெற்கே கடுங்கோன் என்ற பாண்டியனாலும் கி. பி. 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொலைக்கப் பட்டு, வடக்கே பல்லவர் ஆட்சியும், தெற்கே பாண்டியர் ஆட்சியும் ஏற்படுத்தப்பட்டன.[12]

இக்களப்பிரரைப் பற்றிய குறிப்புச் சிறிதேனும் மேற்சொன்ன சங்க கால நூல்களில் இல்லை என் பது கவனிக்கத்தக்கது. இங்ஙனம் கி. பி. 300-க்குப் பிறகு தமிழகத்தில் நுழைந்து ஆதிக்கம் கொண்ட பல்லவரைப் பற்றியோ, 'களப்பிரரைப் பற்றியோ மேற்சொன்ன தொகை நூல்களிலும் காவியங்களி லும் ஒரு குறிப்பேனும் காணப்படாமை கொண்டே, **அவையாவும் கி.பி. 300-க்கு முற்பட்டன** என்பது உள் ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதில் புலனாகும். சங்க காலம் எதுவாயினும் ஆகுக; சங்கம் மருவிய

10. History of India by K. A. N. Sastry, Part I, p. 147.
11. History of Pali Literature by B. C. Law. Vol. II pp. 384, 385 & 389.
12. History of India by K. A. N. Sastry, Part I. p. 148.

காலம் எதுவாயினும் ஆகுக. **இவ்விரு காலங்களும்** மேற்சொன்ன வரலாற்று உண்மைகளால், **கி. பி. 300-க்கு முற்பட்டவை என்பது தெளிவு.**

## திருக்குறளும் மணிமேகலையும்

மேற்கூறிய சங்க நூல்களில் காலத்தால் பிற்பட்டவை சிலப்பதிகாரமும் மணிமேகலையும் என்பது அனைவரும் ஒப்புக்கொண்ட உண்மை. எனவே, மணிமேகலையும் சிலப்பதிகாரமும் சங்க காலத்தின் இறுதிப் பகுதியில் செய்யப்பட்ட பெரு நூல்கள் என்று கருதுதல் பொருந்தும். இவற்றுள் ஒன்றான மணிமேகலையில் திருவள்ளுவரால் செய்யப்பட்ட திருக்குறள் பாக்களுள் ஒன்று அப்படியே எடுத்தாளப் பட்டுள்ளது காண்க:

> "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யு மழை" (குறள் - 55)

இக் குறட்பா மணிமேகலையில்,

> "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
> பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்." [13]

என்று (மணிமேகலை பாடிய) மதுரைக் கூல வாணிகன் சாத்தனாரால் எடுத்தாளப்பட்டது. பரசுராமன் காலத்தில் வாழ்ந்த ககந்தன் என்ற பழைய சோழன் மகன் ஒருவன் 'மருதி' என்ற பார்ப்பன மங்கையைக் காவிரிக்கரையில் கண்டு காம உணர்ச்சியால் அழைத்தான். அவள் மனங்கலங்கி, "உலகில் மழைவளந்தரும் பத்தினிப் பெண்டிர் பிறர் நெஞ்சு

13. மணிமேகலை, சிறைசெய் காதை, வரி: 59—61

புகார். நான் இவன் உள்ளம் புகுந்தேன். இதற்குக் காரணம் யாது ? " என்று சதுக்கப் பூதத்தை அணுகித் தன் மனக்கவலையை வெளியிட்டாள். அதற்கு அப்பூதம் மேற்சொன்ன மூன்று வரிகளையும் கூறியது என்பது வரலாறு. இது நிற்க.

இவ்வாறு திருக்குறள் ஒன்றை வெளிப்படையாகத் தம் நூலில் கூறி, அதனைச் செய்த ஆசிரியரைப் ' பொய்யில் புலவன் ' என்று வியந்து பாராட்டிய மணிமேகலை ஆசிரியர் காலம் யாது என்பதை முதற்கண் ஆராய்வோம்.

## மணிமேகலையின் காலம் என்ன ?

1. மணிமேகலை ஆசிரியரான சாத்தனாரும், சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோ அடிகளும் நண்பர்கள் என்பதும், செங்குட்டுவன் காலத்தவர் என்பதும் இவ்விரு நூல் பாயிரங்களாலும் சிலப்பதிகார அகச்சான்றுகளாலும் அறியலாம். இச்சாத்தனார் வாய்மொழியால் கண்ணகியின் சிறப்பறிந்த செங்குட்டுவன், கண்ணகிக்குக் கோவில் கட்டி வழிபட்டதற்கும், அதற்கு இலங்கை அரசனை கஜபாகு ( கயவாகு ) மன்னன் வந்திருந்தான் என்பதற்கும் சிலப்பதிகாரமே சான்று பகர்கிறது. கயவாகு என்னும் பெயருடைய அரசர் இருவர் முறையே கி. பி. இரண்டாம் நூற்றூண்டிலும், கி. பி. 12-ஆம் நூற்றூண்டிலும் ஆண்டனர் என்று இலங்கை வரலாறு கூறுகின்றது. இவற்றுள் கி. பி. இரண்டாம் நூற்றூண்டில் ஆண்ட

கயவாகுவே (கி. பி. 171 - 193)[14] செங்குட்டுவன் காலத்து அரசஞதல் வேண்டும் என்பதை ஆராய்ச்சியாளர் அனைவரும் ஒப்புகின்றனர். அவனே பத்தினி விழாவில் கலந்து கொண்டு தன் நாட்டிலும் பத்தினிக்குக் கோவில் கட்டியவன் ஆவான். இன்றைக்கும் சிங்களவர் 'பத்தினி தெய்யோ' என்று கண்ணகியைக் கொண்டாடுகின்றனர். இலங்கையிலிருந்துதான் பத்தினியின் உருவச்சிலை இலண்டன் பொருட்காட்சிச் சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

2. மணிமேகலை 27-ஆம் காதையில் 'கிருதகோடி' என்னும் ஆசிரியர், வேத வியாசருடனும் சைமினி என்னும் ஆசிரியருடனும் பிரமாணங்கள் கூறுமிடத்தில் குறிக்கப்பட்டுள்ளார். 'கிருதகோடி' என்பது மீமாம்சை சாத்திரமாகிய வேதாந்த சூத்திரத்திற்குப் போதாயனர் இயற்றிய உரை ஆகும் என்பது 'பிரபஞ்ச ஹிருதயம்' என்னும் வடமொழி நூலில் கூறப்பட்டுள்ளது. அந்நூலில், இவ்வுரை மிக விரிவாக இருந்ததுபற்றி உபவர்ஷர் என்பவர் அதனைச் சுருக்கி அமைத்தனர் என்பதும் குறிக்கப்பட்டுள்ளது. இந்த உபவர்ஷர் கி. பி. 3-ஆம் நூற்றுண்டிற்கு முற்பட்டவர் என்பது ஆராய்ச்சியாளர் முடிபு. எனவே, அவருக்கு முற்பட்ட 'கிருதகோடி' உரை எழுதிய போதாயனர் அவருக்கும் முற்பட்டவர்; ஏறத்தாழக் கி. பி. முதல் நூற்றுண்டின் அல்லது இரண்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர் ஆவர் என்று அறிஞர்

---

14. Archaeological Survey of Ceylon, XIII, 1896, pp. 47—48.

கருதுகின்றனர்.[15] இதனால், 'கிருதகோடி' ஆசிரியரைக் குறிப்பிடுகின்ற **மணிமேகலை**, அவ்வுரை பெரிதும் வழக்கிலிருந்த கி. பி முதல் **அல்லது இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்** என்று கருத இடம் தருகிறது.[16]

3. மணிமேகலை 29-ஆம் காதையிலும், பிற காதைகளிலும் குறிக்கப்பட்டுள்ள பௌத்த சமயக் கொள்கைகள், ஏறத்தாழக் கி. பி. 200—250 ஆண்டுகட்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவராக ஆராய்ச்சியாளரால் துணியப்படும் **நாகார்ச்சுனர்** என்பவரால் உண்டாக்கப்பட்ட மகாயான பௌத்த மதக்கொள்கைகள் அல்ல. அவை ஹீனயான பௌத்தமதக் கொள்கைகள். எனவே, மணிமேகலை காலத்தில் இருந்த தமிழகத்துப் பௌத்தம், ஹீனயானத்தைச் சேர்ந்த சௌத்ராந்திகப் பிரிவினது என்பது தெளிவாகும்.[17] எனவே, **நாகார்ச்சுனர் கொள்கைகள் தமிழகத்தில் பரவுவதற்கு முற்பட்ட காலத்தது மணிமேகலை** என்று கருதுதல் பொருந்தும்.

4. பௌத்த சமயத்துச் 'சாத்திய சித்தி' பிரிவினரான அரிவர்மர் ஏறக்குறையக் கி. பி. 250-இல் வெளிப்படுத்திய அநாத்மவாதக்கொள்கை

---

15. Vedanta Commentators before Sankaracharya by P. V. Kane, Proceedings, Fifth Oriental Conference, Vol. II.

16. 'Manimekalai in its Historical Setting' by Dr. S. K. Ayyangar, pp. 61—67.

17. 'Buddhistic Studies' Compiled by B. C. Law pp. 11—17.

மணிமேகலையில் இல்லை.[18] இதனாலும் மணிமேகலை கி. பி. 250-க்கு முற்பட்டது என்பது தெளிவாகும்.

5. மணிமேகலை ஆசிரியரான சாத்தனார்க்கு நண்பனான செங்குட்டுவன், பத்தினிச் சிலைக்குக் கல் எடுக்க வடநாடு சென்றான் என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது. அவன் எவ்வித எதிர்ப்புமின்றிக் கங்கையைக் கடந்து உத்தரகோசலத்தில் மட்டும் ஆரிய அரசரை வென்றான் என்று அந்நூல் கூறு கிறது. இங்ஙனம் தமிழரசன் ஒருவன் வடக்கே படையெடுத்துச் செல்லத்தக்க வசதி கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் இருந்ததா எனின், ஆந்திரர் ஆட்சி குன்றிய கி. பி. 2, 3-ஆம் நூற்றாண்டுகளில் இப்படையெடுப்பு நிகழ்ந்திருக்க லாம்[19] கி. பி. 163-இல் இறந்த கௌதமீபுத்ர சதகர்ணியின் மகனான புலுமாயிக்குப் பின்வந்த ஆந்திர அரசர் வலியற்றவர்[20] ஆதலின், கி. பி, 163 முதல் ஆந்திர அரசு மறைந்தவரை (கி. பி. 300 வரை) உள்ள இடைக்காலத்தில், செங்குட்டு வன் படையெடுப்பு நிகழ்ந்திருக்கலாம். கயவாகுவின் காலம் கி. பி. 171—193 ஆதலால், செங்குட்டுவன் படையெடுப்பும் இக்காலத்திலேயே நிகழ்ந்ததாதல் வேண்டும். இப்படையெடுப்பில் செங்குட்டுவன் நண்பரான **நூற்றுவர் கன்னர்** அவன் கங்கையைக் கடக்க உதவி புரிந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. '**நூற்றுவர் கன்னர்**' என்பது '**சதகர்ணி**' என்னும் வடமொழித் தொடரின் மொழிபெயர்ப்பு

---

18. 'Manimekalai in its Historical Setting,' pp. 79—95.
19. 'The Sangam Age' by T. G. Aravamudan, pp. 56-57.
20. 'A History of India' by C. S. Srinivasachari, p. 49.

என்பதை எளிதில் உணரலாம். உணரவே, அக் காலத்து ஆந்திரப் பெருநாட்டை ஆண்ட சதகர்ணி அரசன் செங்குட்டுவனுக்கு நண்பன் என்பது பெறப்படும். அக்கால ஆந்திர அரசன் யக்ஞ ஸ்ரீ சதகர்ணி என்பவன். இவன் காலம் கி. பி. 166-196.[21] எனவே, சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்ட நூற்றுவர் கன்னர், வரலாற்றுப் புகழ்பெற்ற 'சதகர்ணி அரசர்' என்பது அறியத்தக்கது. இங்ஙனம்வரலாறு கொண்டும், சமயவுண்மைகள் கொண்டும் அறிஞர் கூறியுள்ள முடிவுகளைக் காணின், **சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் செய்யப்பட்டனவாதல் வேண்டும்** என்பது நன்கு தெளிவாகும்.

## திருக்குறளின் பழைமை

*கி. பி.* 2-ஆம் நூற்றுண்டில் செய்யப்பெற்றதாகத் துணியப்படும் மணிமேகலையில் திருக்குறள் ஆட்சி பெற்றது எனின், திருக்குறள் நூல் சாத்தனுர் போன்ற புலவர்கள் படித்தறியத்தக்க நிலையில் நாட்டில் பெருமை பெற்றிருந்தது என்பது தெளிவாகும். ஆசிரியர் இக்குறளை ஆண்டுள்ள இடம் நன்கு கவனித்தற்குரியது. சோழ அரசருள் மிகப் பழையவனுன (கரிகாலனுக்கும் முற்பட்ட) ககந்தன் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த சதுக்கப் பூதம் மருதி என்னும் பார்ப்பனியை நோக்கி,

> "தெய்வம் தொழாஅள்.......................
> ........................ .. .....................
> பொய்யில் புலவன் பொருளுரை தேருய்",

21. Early History of India by V. A. Smith, p. 223

என்று கூறியதாகச் சாத்தனுர் கூறியுள்ளார். ஒரு சாதாரண பார்ப்பனப் பெண்ணை மருதி இத்திருக்குறளின் கருத்தை அறிந்திருத்தல் வேண்டும் என்று சதுக்கப் பூதம் எதிர்பார்த்தது என்பது சாத்தனுர் கருத்தாதல் தெளியலாம். இவ்வாறு ககந்தன் காலத்திலேயே திருக்குறள் அனைவராலும் அறியத்தகும் நிலையிலிருந்தது (அஃதாவது, மணிமேகலையின் காலத்துக்கு மிக முற்பட்டது திருக்குறள்) என்பதைச் சாத்தனுர் சதுக்கப் பூதத்தின் வாயிலாக நமக்கு உணர்த்தும் திறன் வியந்து பாராட்டற்குரியது அன்றே? சாத்தனுர் உணர்த்துவது உண்மை என்பதை, மணிமேகலைக்கு முற்பட்டனவாகக் கருதப்படும் எட்டுத் தொகை, பத்துப் பாட்டு முதலிய நூல்கள் திருக்குறள் சொற்களையும், தொடர்களையும், கருத்துக்களையும் எடுத்து ஆளுவதிலிருந்தும் நன்கறியலாம்.

## திருக்குறளும் சங்க நூல்களும்

தமிழகத்தில் கி. பி. 300-க்கு முற்பட்ட பல்வேறு காலங்களில் பல்வேறு ஊர்களில் வாழ்ந்த புலவர் பலர், பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடிய பாக்களின் தொகுதியே எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் ஆகும். இவை கி. பி. மூன்ரும் நூற்ருண்டுக்குள்ளேயோ, அல்லது அதற்குப் பிற்பட்ட காலத்திலேயோ தொகுக்கப் பெற்றவை. இவற்றின் மேல் எல்லை இது என அறுதியிட்டுக் கூறத்தக்க சான்றில்லை. இப்பாடல்களைப் பாடிய புலவர் பலர் தம் பாக்களில் திருக்குறள் கருத்துக்களையும், சொற்களையும், சொற்ருெடர்களையும் ஆண்டுள்ள

உண்மை* சங்கநூற் பயிற்சியுடையார்க்கு நன்கு விளங்கும்.

இடச்சுருக்கம் கருதி, ஒவ்வொரு நூலுக்கும் சில எடுத்துக்காட்டுக்களைக் காட்டிச் செல்லுதலே சாலும்.

---

* திருக்குறட் கருத்துக்களையும் தொடர்களையும் சொற்களையும் சங்கப் புலவர்கள் ஆண்டனர் என்பதற்கு மாருக, சங்கப் புலவர் தம் பாக்களை நன்ருகப் பயின்று அக்கருத்துக்களைத் திருவள்ளுவர் தமது அறநூலில் பெய்துவைத்தார் என்று ஏன் கொள்ளலாகாது? அங்ஙனம் கொள்ளின், திருவள்ளுவர் சாத்தனர் காலத்திற்கு முன்னும், சங்கப் புலவர்க்குப் பின்னும் வாழ்ந்தவராகக் கொள்ளலாமே என்று சிலர் கருதலாம்.
புலவர் பலர் ஓர் அறநூலிலிருந்து கருத்துக்களை எடுத்துத் தம் பாக்களில் பயன்படுத்தலே பெருவழக்குடையது. அங்ஙனம் பயன்படுத்துவோர், அறநூல் மேற்கோளை அப்படியே கையாளலும், அதனைப் பல அடிகளால் விரித்துக் கூறலுமே இயல்பு. தொகை நூல்களில் இந்த முறையினைக் காணலாம். திருக்குறள் இரண்டடிகளால் இயன்றது. சங்ககாலப் புலவர்களோ, இரண்டடிக் (குறட்) கருத்துக்களைப் பல அடிகளில் விளக்கிக் கூறியுள்ளனர். இந்த உண்மையை நன்கு உளங்கொள்ளின், திருக்குறள் கருத்துக்களையே பின் வந்த சங்க காலப் புலவர் கையாண்டனர் என்பதைத் தெளியலாம்.
மேலும், ‘‘அறம் பாடிற்றே’’ என்று தெளிவாகச் சங்ககாலப் புலவர் தம் பாடலுள் சுட்டியிருத்தல் கவனிக்கத்தக்கது. வட மொழியிலுள்ள தர்ம சூத்திரங்கள் உரை நடையில் இயன்றவையே தவிரப் பாட்டால் இயன்றவையல்ல. பாட்டாலியன்ற பழைமையும் பெருமையும் உடைய அறநூல் திருக்குறள் ஒன்றே யாதலின், அதனையே புலவர் சுட்டினரெனக் கொள்ளுதல் ஏற்புடையது. எனவே, சங்ககாலத்திலேயே திருக்குறள் சங்கப் புலவர் பாராட்டுக்கு உரியதாக இருந்தது எனக் கோடலே சால்புடைத்து.

## நற்றிணை

1 “நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு” (குறள்-20)

“நீரின் றமையா உலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி...”
(நற்றிணை-1)

2 “நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.” (குறள்-791)

“............................பெரியோர்
நாடி நட்பி னல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே.”
(நற்றிணை-32)

3 “பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.” (குறள்-580)

“முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனிநா கரிகர்.” (நற்றிணை-355)

## குறுந்தொகை

1 “மலரினும் மெல்லிது காமஞ் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்.” (குறள்-1289)

“ஐதே காமம்”-காமநோய் நுண்ணியது;
மெல்லியது. (குறுந்தொகை-217)

2 “பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.” (குறள்-805)

“பேதை மையாற் பெருந்தகை கெழுமி
நோதகச் செய்ததொன் றுடையேன் கொல்லோ.”
(குறுந்தொகை-230)

3 "வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்." (குறள்–1261)

"வீங்கிழை நெகிழ விம்மி யீங்கே
எறிகட் பேதுற லாய்கோ டிட்டுச்
சுவர்வாய் பற்றுநின் படர்........."
(குறுந்தொகை–358)

## பதிற்றுப்பத்து

1 "நின் மறங்கூறு குழாத்தர்." (நான்காம் பத்து, 9.)
வீரர், தம் தலைவரது வீரத்தையே எடுத்தோதி மேம்படுதல் இயல்பு. இதனை,

"என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்".

என்று வீரர் தம் தலைவனது சிறப்பைக் கூறும் குறளில் (771) காண்க.

2 "தொலையாக் கொள்கைச் சுற்றத்தார்".
(ஏழாம் பத்து, 10.)

தம்மால் சுற்றப்பட்ட தலைவன் செல்வம், வலிமை முதலியன அற்றபோதும், அவனை நீங்காது பழைமை பாராட்டும் பண்பினர் ஆதலின் சுற்றத்தார் இங்ஙனம் சிறப்பிக்கப்பட்டனர் இக்கருத்தை,

"பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள".

என்னும் குறளில் (521) காண்க.

3 "நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலி னுண்டென் னுயிர்." (குறள்–1213)

"கனவினும் பிரியா வுறையுளொடு.......
மீனொடு புரையுங் கற்பின்
வாணுதல் அரிவை.........." (ஒன்பதாம் பத்து. 9.)

## பரிபாடல்

1 " காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு." (குறள்-1251)

" காமக் கணிச்சியாற் கையறவு வட்டித்துச்
சேமத் திரைவீழ்த்துச் சென்றமளி சேர்குவோர்."
(பரிபாடல் 10. வரிகள் 34-35)

2 " இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள." (குறள்-223)

" இல்லது நோக்கி இளிவரவு கூறுமுன்
அல்லது வெஃகி வினைசெய்வார்."
(பரிபாடல் 10. வரிகள் 87-88)

3 " ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டும்
தெற்றென்க **மன்னவன் கண்.**" (குறள்-581)

" புடைவரு சூழல் புலமாண் வழுதி
மடமயி லோரும் அனையவ ரோடுங்
**கடனறி காரியக் கண்ணவ ரோடுநின்**
சூருறை குன்றிற் றடவரை யேறி."
(பரிபாடல் 19. வரிகள் 20-24)

## கலித்தொகை

1 " காமமும் நாணு முயிர்காவாத் தூங்குமென்
நோனா உடம்பி னகத்து." (குறள்-1163)

" நலிதரும் காமமுங் கௌவையும் என்றிவ்
வலிதின் உயிர்காவாத் தூங்கியாங் கென்னை
நலியும் விழுமம் இரண்டு." (கலி-142)

" காம முழந்து வருந்தினர்க் கேம
மடலல்ல தில்லை வலி." (குறள்-1131)

" காமக் கடும்பகையிற் ருேன்றினேற் கேமம்
எழினுத லீத்தவிம் மா." (கலி-139)

2 " குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்." (குறள்-549)

" குடிபுறங் காத்தோம்புஞ் செங்கோலான் வியன்ருனை
விடுவழி விடுவழி சென்ருங்கு அவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்ருற் பசப்பே."
(கலி-130)

3 " துஞ்சுங்காற் ருேண்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து." (குறள்-1218)

" தெற்றெனக் கண்ணுள்ளே தோன்ற
இமையெடுத்துப்
பற்றுவென் என்றியான் விழிக்குங்கால் மற்றுமென்
நெஞ்சத்துள் ளோடி யொளித்தாங்கே துஞ்சாநோய்
செய்யும் அறனில் அவன்." (கலி-144)

## அகநானூறு

1 " மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு." (குறள்-60)

" கடவுட் கற்பொடு குடிக்குவிளக் காகிய
புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்
நன்ன ராட்டி ............ ..." (அகநானூறு-184)

2 " தாம்வீழ்வார் மென்ருேள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணுன் உலகு." (குறள்-1103)

" செய்வுறு விளங்கிழைப் பொலிந்த தோள்சேர்பு
எய்திய கனைதுயில் ஏற்றெுறுந் திருகி
மெய்புகு வன்ன கைகவர் முயக்கின்
மிகுதிகண் டன்ருே இலனே." (அகநானூறு-379)

3 “செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.” (குறள்–1151)

“வருவீர் ஆகுதல் உரைமின் மன்னே
.....................................
நின்றுங்குப் பெயருங் கானஞ்
சென்றோர் மன்னென இருக்கிற் போர்க்கே.
(அகநானூறு–387)

## புறநானூறு

1 “சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங் (கு)
ஆக்கம் எவனோ உயிர்க்கு.” (குறள்–31)

“அறத்தான் வருவதே யின்பம்மற் றெல்லாம்
புறத்த புகழு மில.” (குறள்–39)

“சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல.”
(புறம்–31)

2 “எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.” (குறள்–110)

“நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ.” (புறம்–34)

3 “பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.” (குறள்–528)

“வரிசை யறிதலோ வரிதே பெரிதும்
ஈத லெளிதே மாவண் டோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே.”
(புறம்–121)

4 " ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். " (குறள்–69)

" நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
..........................................
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே. "
(புறம்–278)

## பத்துப் பாட்டு

1 " பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர். " (குறள்–528)

" வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த "
(சிறுபாணாற்றுப்படை, வரிகள் 217–218)

2 " ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு. " (குறள்–231)

" உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ். " (குறள்–232)

" ..................................விழுநிதி
யீதல் உள்ளமொ டிசைவேட் குவையே. "
(மதுரைக்காஞ்சி, வரிகள் 204–205)

3 " வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம். " (குறள்–85)

" விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோ டுண்டலும் புரைவதென் றுங்கு. "
(குறிஞ்சிப் பாட்டு, வரிகள் 206–207)

இங்ஙனம் குறட்பாக்களையும் அவற்றின் தொடர்களையும் கருத்துக்களையும் தம் பாக்களில் எடுத்தாண்டவர்கள் பல்வேறிடத்தவர் - பல்வேறு

காலத்தவர் ஆதலின், அவர்தம் காலத்திற்கும் முன்னரே திருக்குறள் அறப்பெருநூலாக நாட்டில் வழக்குப் பெற்றிருந்தது என்னும் உண்மை தெற்றென விளங்கும்.

## சிலப்பதிகாரமும் திருக்குறளும்

சிலப்பதிகாரத்திலும் பல இடங்களில் திருக்குறட் சொற்களும் தொடர்களும் கருத்துக்களும் பயின்று வருகின்றன. அவற்றுள் இரண்டினைக் காண்க :

1 " பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். " (குறள்-319)

" முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிகாண். "
(சிலப்பதிகாரம் - வஞ்சினமாலை)

2 " தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. " (குறள்-55)

" தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால். "
(சிலப்பதிகாரம் - கட்டுரை காதை)

இங்ஙனமே சங்க காலத்திற்குப் பிற்பட்ட பெருங்கதை,[22] சைவத் திருமுறைகள், ஆழ்வார்

---

22. குணாட்டியர் பைசாசமொழியில் செய்த **பிருகத் கதையைக்** கி. பி. 6-ஆம் நூற்றாண்டின் இடையில் கங்க நாட்டு அரசனாக இருந்த துர்விநீதன் வடமொழியில் இயற்றினான். அதனைப் பின்பற்றியே கொங்குவேளிர் என்பவர் தமிழில் **பெருங்கதையைப்** பாடியுள்ளார். எனவே, அந்நூலின் மேல் எல்லை ஏறத்தாழக் கி. பி. 7-ஆம நூற்றாண்டு என்னலாம்.

களின் அருட்பாடல்கள் முதலிய அனைத்திலும் குறட்பாக்களும் அவற்றின் தொடர்களும் கருத்துக் களும் மிகப்பலவாகக் கையாளப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் நோக்க, இன்றுள்ள சங்க நூற் பாடல்கள் முதல், பின்னூல்கள் அனைத்திற் குமே திருக்குறள் போற்றத்தக்க அறநூலாக விளங்கி வந்தது என்பது எளிதில் புலனாகும்.

## திருவள்ளுவர் காலம்

ஆயினும், திருவள்ளுவர் ஏறக்குறைய எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்னும் கேள்வி எழுதல் இயல்பு. அதற்கு ஒருவாறு விடை காணல் நமது கடமையாகும்.

1. திருவள்ளுவர் காலம் சங்ககாலத்தின் முற் பகுதியைச் சேர்ந்தது என்று கூறுவோரும், சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத்தது என்று கூறு வோரும், இன்றுள்ள சங்கப்பாடல்களிற் பல ஏறத் தாழக் கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந் தவை என்பதை ஒப்புகின்றனர். இதை நோக்க, நாம் இதுகாறும் கண்ட சான்றுகளைக் கொண்டு, **திருவள்ளுவர் காலம் இம்முதலிரண்டு நூற்றாண்டுகட்கும் முற்பட்டதெனக் கருதலாம்.**

2. **ககந்தன்*** என்ற பழைய சோழ அரசன் காலத்திலேயே திருக்குறள் அறிவைப் பொதுமக் களிடம் சதுக்கப்பூதம் எதிர்பார்த்தது என்று கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சாத்தனார் கூறு

* இப்பெயர் அப்பண்டைக்காலச் சோழனுக்கு வழங்கிய தென் பது ஐயத்திற்குரியது.

வதால்,[23] திருக்குறளின் பழமை நன்கு புலனாகும். ஆகவே, வரலாற்றின் துணைகொண்டு காலம் கூற முடியாத ககந்தனுக்கும் முற்பட்டது திருக்குறள் எனக்கருத இடமுண்டாகிறது.

3. திருக்குறளைப் பாராட்டிச் சங்கப் புலவர்கள் பாடியனவாகக் கருதப்படும் 'திருவள்ளுவ மாலை' ஆராய்ச்சிக்குரியது; அப்புலவர்கள் பாடிய தொகை நூற் பாக்களை ஆராயின், அவர்கள் பல்வேறு காலத்தவர் என்பது அறியக் கிடக்கின்றது. எனவே, பல்வேறு காலத்தில் வாழ்ந்த புலவர் பாடிய பாக்கள், பிற்காலத்தில் புறநானூறு போன்ற தொகை நூல்களாகத் தொகுக்கப்பட்டாற் போல, பல்வேறு காலங்களில் வாழ்ந்த புலவர் பலர் திருக்குறளைப் பாராட்டிப் பாடிய பாக்களையும் பிற்காலத்தவர் 'திருவள்ளுவ மாலை' என்னும் தலைப்பில் தொகுத்தனர் என்றே கருதுதல் பொருந்தும். அத்திருவள்ளுவ மாலையில் காணப்படும் பழம் புலவர்க்கு, 'வள்ளுவர் சமகாலத்தவர்' என்று கொள்ளுதலினும், அவர்க்கு முற்பட்டவராகக் கொள்வதே சால்புடைத்தாம். புலவர் எவரும் தம் காலத்தவரால் தலைநின்ற தேவநாவலராய் மதிக்கப்படும் வழக்கம் யாண்டும் இல்லை. பெரும்பாலும் சம காலத்தவரால் அவமதிப்பும், தாமியற்றிய நூலின் மெய்ப்பெரு வலியால் பிற்காலத்தவரால் மேம்பாடும்

23 சாத்தனார் தாமறிந்த குறட்பாவைச் சதுக்கப்பூதத்தின் வாயிலாகத் தெரிவித்தாரேயன்றி வேறன்று எனக் கருதுவோரும் உளர். அங்ஙனம் சாத்தனார் கூறியிருப்பரேல், அது **கால வழு** (Anachronism) எனப்படும். மணிமேகலைக்கு முற்பட்ட சங்கப் பாடல்களிலேயே குறட் கருத்துக்களும் சொற்களும் ஆளப்பட்டிருத்தலின், சாத்தனார் கூறியிருத்தல் கால வழு என்னும் குற்றத்தின்பாற்படாது எனக்கொள்ளலாம்.

அடைவதே புலவர் உலகியல்பு. தெய்வப் பாவலராக வள்ளுவரைச் சங்கப் பழம்புலவர்கள் கூறுவதால், அவர் தமக்கு வள்ளுவர் நீண்ட காலத்துக்கு முற்பட்டவராகவும், அவர் அறநூலின் இறவாச் சிறப்பு அங்கீகரிக்கப்படுதற்குப் போதிய அவகாசம் அக்குறளுக்கும் அதன் அடிகளைப் பாராட்டி எடுத்தாளும் சங்கப் பனுவல்களுக்கும் இடையே ஏற்பட்டிருத்தல் வேண்டும்.''[24]

4. கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த கௌடில்யர் இயற்றிய பொருள் நூலில் கண்ட சில செய்திகளும் திருக்குறள் பொருட்பால் பகுதிகள் சிலவும் கருத்தில் ஒன்றுபட்டிருத்தலால், திருவள்ளுவர் கௌடில்யரது பொருள் நூலைப் படித்திருக்கலாம் என்று ஒருசார் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.[25] இங்ஙனம் கொண்டு, திருவள்ளுவர் காலம் கி. மு. முதல் மூன்று நூற்றாண்டுகட்கு உட்பட்டதாகலாம் எனக் கூறுகின்றனர்.[26]

---

24 '' திருவள்ளுவர் '', நாவலர் சோமசுந்தர பாரதியார். பக்கம்—4.

25 திருக்குறளில் காணப்படும் ஒரு சில சொற்களையும், வடமொழிச் சொற்களையும் தொடர்களையும் கொண்டும், குறளில் காணப்படும கருத்துக்கள் சில வடமொழி நூல்களில் காணப்படுதல் கொண்டும், குறள் மேலே கூறப்பெற்ற சங்க காலத்திற்கும் பிந்தியது என்று கூறும் பேராசிரியர் இராவ் சாஹிப் S. **வையாபுரிப் பிள்ளையவர்கள்** கூற்றும், அதனைப் பேராசிரியரும் பெருநாவலரும் ஆகிய **சோமசுந்தர பாரதியாரவர்களும்,** திருப்பதி கீழ்க்கலை ஆராய்ச்சிக் கூடத்துத் தமிழாராய்ச்சித்துறை அறிஞரான **பழநியப்ப பிள்ளையவர்களும்,** மறுதது எழுதியுள்ள கட்டுரைகளும் இந்நூலில் **பிற்சேர்க்கையாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றைப் படித்துத் தெளிக.

26 Studies in Tamil Literature and History by V. R. R. Dikshitar, pp. 133, 150—176.

தொல்காப்பியத்தை அடுத்துச் செய்யப்பட்டதாகத் திருக்குறளைக் கூறலாம்.[27] இவை அனைத்தையும் நோக்க, திருவள்ளுவர் இன்ன நூற்றுண்டினார் என்று உறுதியாகக் கூறத்தக்க சான்றுகள் கிடைக்கும்வரை, அவர் கிறிஸ்துப் பெருமானுக்கு முற்பட்ட காலத்தவர் என்று கூறுதலே பொருத்தம் என்பது தெரிகிறது.

## திருக்குறளுக்கு மூல நூல்கள்

திருக்குறள் இன்றுள்ள சங்கப்பாக்கட்கு முற்பட்டதாயின், அதற்குரிய மூல நூல்கள் யாவை? என்னும் கேள்வி அடுத்து எழுவதாகும். இதற்கு விடை காண்பதற்கு முன்பு, இன்றுள்ள இலக்கண நூல்களுள் காலத்தால் மிகவும் முற்பட்ட தொல்காப்பியத்தின் காலத்தை அறிதல் நன்ருகும். தொல்காப்பியம் ஏறத்தாழ 1600 சூத்திரங்களைக் கொண்டது. அதனில் தொல்காப்பியர் நூற்றுக்குப் பதினறு இடங்கள் வீதம் (சுமார் 260 இடங்களில்) தமக்கு முன்னரும் சம காலத்திலும் வாழ்ந்த பலதிறப்பட்ட இலக்கண ஆசிரியர்களைக் குறித்துள்ளார் என்பது அறியத்தகும். அறியவே, தொல்காப்பியம், பலர் நினைத்தல் போலத் தமிழ் இலக்கணத்தை விரித்துரைக்கும் நூலன்று ; காலத்திற்கு ஏற்ருற் போலத் தொகுத்துக் கூறும் நூலேயாகும் என்பதை நன்குணரலாம்.[28] இத் தொல்காப்பியத்

27 சோமசுந்தர பாரதியார், "திருவள்ளுவர்" (ஆங்கில நூல்) பக். 5—18.

28 தமிழ்ப்பொழில், துணர் 15, பக். 320—331.
"மணிமலர்", நாவலர் சோமசுந்தர பாரதியார், 'தொல்காப்பியன்' பக். 25—33.

தின் காலத்தைப்பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் கீழ் வருமாறு கூறியுள்ளனர். "இலக்கண ஆசிரியர்கள், தம் காலத்தனவும், முந்தியவுமான செய்யுட்களைக் கொண்டு இலக்கணம் செய்தல் மரபு. பரணர், கபிலர், நக்கீரர் இவர்கட்குப் பிற்பட்டவர் தொல்காப்பியராயின், அவர் தம் பாடல்கட்கு முரணாக விதிகள் செய்திரார் அல்லவா? தொல்காப்பியச் சூத்திர விதிகட்கும் அப்புலவர்களின் செய்யுள்களில் காணப் படும் சொற்களுக்கும், சொற்றொடர்க்கும் சிறந்த இலக்கண மாறுபாடுகள் இருத்தல் ஒன்றே, தொல் காப்பியர் கடைச்சங்கப்புலவராய பரணர் முதலியோர்க்குப் பல நூற்றாண்டுகட்கு முற்பட்டவராவர், [29] என்று கூற இடந்தருகிறது." "தொல்காப்பியர், செய்யுள் பற்றியும் வழக்குப் பற்றியும் கூறியுள்ள இலக்கணங் களில் பலவற்றிற்கு இலக்கியம் காட்டுதல் இப் போது வழங்கும் நூல்களைக் கொண்டு இயலாமை யானும், இவர் கூறிய இலக்கணங்களின் வேறாய்ச் சில சொற்களும் கொள்கைகளும் இந்நூல்களில் காண்டலானும், தொல்காப்பியர் இந்நூற்கெல்லாம் முந்தியவரென்று துணிதல் ஒருதலையாவது." [30] "இவற் றால், தொல்காப்பியனார் தம் இலக்கணத்திற்குக் கருதிய இலக்கியங்கள் எத்துணையோ பல, அவர்க்கு முன்னே இத்தமிழ் நாட்டு வழங்கியன என்றே ஒருதலை யாகத் துணியலாம். [31]

இலங்கையில் நடைபெற்ற மூன்று கடல்கோள் களின் காலம் கி. மு. 2365, கி. மு. 504, கி. மு. 306

---

29 வேங்கடராஜுலு ரெட்டியார், "பரணர்", பக். 172—173.

30 "தமிழ் வரலாறு", மகாவித்துவான் இராகவையங்கார், பக். 268.

31 ஷை பக். 273.

என்று இலங்கை வரலாறு கூறுகின்றது. கடல் கோளினால் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்ட கவாடபுரம் அழிந்தது எனக் களவியல் உரை கூறு கிறது. அக்கடல்கோள் அணித்துள்ள இலங்கை யோடு தொடர்புடையதாதல் வேண்டும். இலங்கை யில் நடைபெற்ற மூன்றும் கடல்கோள் தொல்காப் பியர் காலமெனக் கொள்ளினும், தொல்காப்பியர் காலம் ஏறத்தாழக் கி. மு. 300 எனக் கோடல் தவருகாது.[32]

இங்ஙனம், தொல்காப்பியத்திற்கு முன்னரும் சம காலத்திலும் - இன்றுள்ள சங்கப் பாக்களுக்கு முன்னரே-இலக்கண ஆசிரியர் பலர் இருந்தனர் என்ப தையும், இலக்கிய நூல்கள் பல இருந்தன என்பதை யும் அறிகின்றோம். எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுதல் போல இலக்கியத்திலிருந்து எடுபடு வது இலக்கணம். ஆதலால், தொல்காப்பியத்திற்கு முற்பட்ட இலக்கண நூல்களுக்குக் கருவூலங்களா கப் பல இலக்கிய நூல்கள் இருந்திருத்தல் வேண் டும் என்பது தேற்றமன்றோ? அவை பரந்துபட்ட காலத்தினவாதல் வேண்டும். அவற்றுள் சிலவே இறையனார் களவியலுரை முதலியவற்றில் பெய ரளவில் சுட்டப்படும் நூல்கள். அப் பழைய இலக் கிய நூல்களே அறம், பொருள், இன்பம் பற்றிய பல குறிப்புக்களைத் திருக்குறளுக்கு உதவியிருக் கலாம்.

மிகப் பல நூற்றுண்டுகட்கு முன்னிருந்து தமிழ கத்தை ஆண்டுவந்த சேரசோழ பாண்டியருடைய ஆட்சிமுறைகளைக் கொண்டும், சான்றோர் வரைந்த

32 தமிழ்ப் பொழில், 15, பக். 323 - 329.

மேற்சொன்ன பண்டை இலக்கியங்களைக் கொண்டும் உலகத்தார் அனைவரும் மனமுவந்து ஏற்றுக் கொள்ளும் முறையில்' திருவள்ளுவர் தம் அறநூலைச் செய்து முடித்தனர் என்று கொள்ளுதலே இதுகாறும் கண்ட உண்மைகளை நோக்கப் பொருத்தமாகக் காணப்படுகிறது.

## முடிவுரை

இதுகாறும் பேசப்பட்ட உண்மைகளால், (1) தொல்காப்பியத்துக்குப் பின்பு எழுந்த நூல் திருக்குறள் என்பதும், (2) தொல்காப்பியர் காலம் ஏறத்தாழக் கி. மு. 300 என அறிஞர் கருதுவதால் திருக்குறள் கி. மு. 300க்குப் பிற்பட்டது என்பதும், (3) கி. பி. முதல் இரண்டு நூற்றுண்டுகளைச் சேர்ந்தனவாகக் கருதப்படும் பெரும்பாலான தொகைநூற் பாக்களிலும் சிலப்பதிகாரம் மணிமேகலை எனப்படும் காவியங்களிலும் குறட்பாக்களின் சொற்களும் தொடர்களும் கருத்துக்களும் ஆளப்பட்டிருத்தலின், அப்பாக்களுக்கு ( கி. பி. முதல் இரண்டு நூற்றுண்டுகட்கு ) முற்பட்டது திருக்குறள் என்பதும் தெளியலாம். தெளியவே, வேறு தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில், திருவள்ளுவர் காலம் ஏறத்தாழக் கி. மு. 1 முதல் 300-க்கு உட்பட்டது என்று கோடலே அமைவுடையதாகும்.

### இக்கட்டுரையில் எடுத்தாண்ட நூல்களும் இதழ்களும்

### (1) தமிழ் நூல்களும் இதழ்களும்

1. தொல்காப்பியம்
2. திருக்குறள்

3. நற்றிணை
4. குறுந்தொகை
5. பதிற்றுப் பத்து
6. பரிபாடல்
7. கலித்தொகை
8. அகநானூறு
9. புறநானூறு
10. பத்துப் பாட்டு
11. சிலப்பதிகாரம்
12. மணிமேகலை
13. திருவள்ளுவர் – சோமசுந்தர பாரதியார்
14. பரணர் – வேங்கடராஜுலு ரெட்டியார்
15. 'தமிழ்ப் பொழில்' – கரந்தைத் தமிழ்ச் சங்கம்
16. 'செந்தமிழ்' – மதுரைத் தமிழ்ச் சங்கம்
17. 'மணி மலர்'
18. தமிழ் வரலாறு – ரா. இராகவையங்கார்

## (2) ஆங்கில ஆராய்ச்சி நூல்கள்

1. Pallavas of Kanchi - R. Gopalan
2. Studies in Pallava History - Fr. H. Heras
3. Successors of the Satavahanas - D. Sircar
4. Pandyan Kingdom - K. A. N. Sastry
5. Silappadikaram - V. R. R. Dikshitar
6. History of India - K. A. N. Sastry
7. A History of India - C. S. Srinivacachari
8. Early History of India - V. A. Smith

9. History of Pali Literature
- Dr. B. C. Law
10. Archaeological Survey of Ceylon
11. Proceedings of the Fifth Oriental Conference, Vol. 2.
12. Manimekalai in its Historical Setting
- Dr. S. K. Aiyangar
13. Buddhistic Studies - Dr. B. C. Law
14. The Sangam Age - T. G. Aravamuthan
15. Thiruvalluvar - S. S. Bharathiar

பிற்சேர்க்கை—1

# வள்ளுவர் காலம்

**பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள்,**
**பி. ஏ., பி. எல்.,**

[ இது, சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் பிள்ளை அவர்கள் பதிப்பித்த 'திரிகடுகமும் சிறுபஞ்சமூலமும்' என்னும் நூலில் அவர்கள் எழுதியுள்ள முன்னுரையின் ஒரு பகுதி. ]

.........முதலாவது வள்ளுவரது காலத்தை நோக்குவோம். இவரால் கடைச்சங்கம் அழிவுற்றது எனக் கர்ண பரம்பரை வரலாறு கூறும். ஆதலால் கடைச் சங்கத்தில் நூல்கள் தொகுக்கப்பெற்ற காலத்திற்கும் இவர் பிற்பட்டவர் என்பது தெளிவு. சங்கச் செய்யுட்களாகிய தொகை நூல்களைத் தொகுத்த காலப்பகுதி வேறு, அச் செய்யுட்களைப் புலவர்கள் இயற்றிய காலப்பகுதி வேறு என்பதைச் சிறிதளவும் நாம் மறக்கலாகாது. இச் செய்யுட்கள் கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றிருக்க வேண்டும் என்றும், இவை

கள் நான்காம் நூற்றுண்டின் இறுதியில் அல்லது 5-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தொகுக்கப் பெற்றிருக்க வேண்டும் என்பதும் எனது குறுந் தொகை ஆராய்ச்சியுரையில் (கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழா வெளியீடு. பக். 172–186) தெளிவித்திருக்கின்றேன். இக் கால வரையறை எவ்வகையால் நோக்கினும் பொருத்தம் உடைய தாகவே காணப்படுகிறது. ஆகவே, வள்ளுவர் கி. பி. **5-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவராதல் வேண்டும்** எனக் கொள்ளுதல் ஏற்புடைத்தாகும். இது வேறு சில சான்றுகளானும் உறுதியடை கின்றது. சங்க நூல்களில் அகநானூற்றைத் தொகுப்பித்தான் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. தொகுப்பித்தான் என்ற அளவில் இவனது காலம் 5-ஆம் நூற்றுண்டின் தொடக்கமாதல் வேண்டும் எனக்கொள்ளலாம். இவன் வள்ளுவரது முப்பாலைப் புகழ்ந்து பாடியுள்ளான் என்று திருவள்ளுவமாலை உணர்த்துகின்றது. திருவள்ளுவ மாலையின் உண்மை யியல்பு எவ்வாருயினும் ஆகுக. வள்ளு வர், உக்கிரப் பெருவழுதியின் காலத்தவர் என்று பிற்காலத்தவர் கருதக்கூடிய அளவில் இருவரும் நெருங்கிய காலத்தினராய் இருந்தனர் என்று நாம் கொள்ளுவதில் தவறென்றும் 'இல்லை. எனவே, 5-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வள்ளுவர் வாழ்ந்தனர் என்று கொள்ளுவது நேரிது.

இவரது பெருநூலிலே பாக்கியம் (1141), பூசனை (18), மங்கலம் (60) முதலிய வடசொற்கள் காணப்படுகின்றன. மங்கலம் என்ற சொல் தொல் காப்பியத்திலும் உள்ளதாகும். பெருமங்கலம், வாண்மங்கலம் (தொல். புறத். 36), மங்கலமொழி

(தொல். பொருள். 50), மண்ணுமங்கலம் (தொல். புறத். 13, 36) என்ற பிரயோகங்களேக் காண்க. ஆனால், பாக்கியம் என்ற சொல்லும் பூசனை என்ற சொல்லும் சங்க நூல்களில் வழங்கப்படாதன. இங்ஙனம் தனிமொழியேயன்றி, ஆதிபகவன் என்ற இருமொழித் தொடரும் வள்ளுவரால் கையாளப்பட்டுள்ளது. இது போன்ற வடமொழி வழக்கும் சங்க இலக்கியங்களில் காணுமாறில்லை. ஒருவந்தம் (563, 593) என்ற சொல் வள்ளுவரில் இரண்டு இடங்களில் உள்ளது, இச் சொல்லில் ஒரு என்பது தமிழ்; அந்தம் என்பது வடசொல். இவ்விரண்டும் இயைந்து ஒரு சொன்னீர்மைப் பட்டு வட மொழியிலுள்ள ஏகாந்தம் என்பதற்குரிய கலவைச் சொல்லாக (hybrid) தமிழில் ஆளப்பட்டுள்ளது. இக்கலவை ஆட்சியும் சங்க நூல்களில் காணப்படாததொன்றாகும். இங்குக் காட்டியன வெல்லாம் வட சொற்களை எடுத்தாளுதலில் வள்ளுவர் விரிந்த மனப்பான்மையுடையவர் என்பதை நன்கு தெரிவிக்கின்றன. இம்மனப்பான்மையும் சங்க காலத்தின்றிப் பிற்காலத்துத் தோன்றியதேயாம். இவற்றாலும் சங்க காலத்திற்குப் பிற்பட்டவர் வள்ளுவர் என்பது நன்கு உணரக்கிடக்கின்றது.

இத்துணிபு உண்மையாதல் வள்ளுவர் வழங்கியுள்ள ஒருசில தமிழ்ச்சொற்களாலும் அறியலாகும்:

" இரப்பன் இரப்பாரை யெல்லாம் இரப்பிற்
கரப்பா ரிரவன்மின் என்று.!' (1067)

என்ற குறளில் ' இரப்பன் ' என்ற சொல்லும்,

" உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம். " (1125)

"உள்ளுவன் மன்யான் உரைப்ப தவர்திறமாக்
கள்ளம் பிறவோ பசப்பு." (1184)

என்ற குறள்களில் 'உள்ளுவன்' என்ற சொல்லும் காணப்படுகின்றன். ஈரிடத்தும் 'உள்ளுவல்' எனக் கொள்ளுதல் அமையுமேனும், 'அன்' ஈறு வள்ளுவர்க்கு உடம்பாடாதலின் உரைகாரர் 'உள்ளுவன்' என்றே கொண்டனர். இவ்விரண்டும் எதிர்காலம் பற்றித் தன்மை யொருமையில் வந்துள்ளன. இதற்குரிய விகுதியாக 'அல்' என்பதே தொல்காப்பியனாரால் படிக்கப்பட்டுள்ளது. (தொல். சொல். 200) உண்பல், தின்பல் என்பன உதாரணங்கள். பிற்காலத்தில் அல்லீறு அன்னீறாக வழங்கத் தலைப்பட்டது. இளம்பூரணர் 'கடதற வென்னும்' (தொல். சொல். 200) சூத்திர உரையில் 'இப்பொழுது இதனை உண்பன், தின்பன் என அன்னீறாக வழங்குப' என்றெழுதினர். நேமிநாத நூலாரும் 'அல்லும் தனித்தன்மையாம்' (சொல். 39) என்றே கூறியொழிந்தார். இதன் உரையில், "இக்காலத்து அல்வினை அன்னாய் நடக்கவும் பெறும்; என்னை? 'அல்வினை அன்னாய்த் திரியவும் பெறுமே'; உதாரணம் 'கூறுவன்' என்றார் அமிதசாகரர்" என்று காணப்படுகிறது. இக் கூற்றுக்களால், எதிர்காலம் குறித்துத் தன்மையொருமையில் அன் விகுதி பெறுதல் மிகப் பிற்பட்ட காலவழக்கு என்று தெரியலாம். ஆகவே, இவ்வகை வழக்குகள் காணப்படுகின்ற திருக்குறளும் சங்க காலத்திற்கு மிகப் பிற்பட்ட காலத்ததாகல் வேண்டும்.

இனி, வேறொருவகைச் சொற்களை நோக்குவோம். வள்ளுவர்,

" வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தாற்குந் துய்த்தல் அரிது. (377)

" இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்
இல்லவள் மாணக் கடை." (53)

என்ற குறள்களில் 'அல்லால்', 'ஆனல்' என்ற வினையெச்சங்களை வழங்குகிறார். இவ்விரண்டு எச்சங்களும், சங்கநூல் வழக்கிற் காணப்படாதன. 'அல்லால்' திருக்குறளில் 12 இடங்களில் (7, 8, 16, 233, 235, 377, 406, 497, 515, 762, 1095, 1188) வருகின்றது. இதன் சொல்லமைப்பும் ஊன்றி நோக்கத்தக்கது. 'அல்' என்ற வினைக்குறிப்படியாக 'ஆல்' என்ற எச்சவீறு புணர்ந்து வந்ததென்றேனும், 'அல்லது' 'அல்லாமை' என்பது 'அல்லாமல்' எனத்திரிந்து பின் மகரங்கெட்டு 'அல்லால்' என நின்றது என்றேனும் கொள்ளுதல் வேண்டும். 'ஆல்' எனவரும் ஓர் எச்ச ஈறேனும் 'அல்லால்' என்பது போன்ற வழக்குகளேனும் தொல்காப்பியத்திலாதல், சங்க நூல்களிலாதல், காணப்படுமாறில்லை. இவ்வழக்கு மிகப்பிற்பட்ட காலத்தில் தோன்றி இன்றளவும் நிலைத்து நிற்கின்றது.

" அன்னே யுன்னை யல்லால் இனி யாரை நினைக்கேனே"

என்று சுந்தரர் 9-ஆம் நூற்றாண்டினிடையில் பாடியருளினர். 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாவுக்கரசர்,

" நீதியால் நின்னை யல்லால் நினையுமா நினைவிலேனே"
(IV, 63, 1.)

என அருளிச் செய்தனர். 6-ஆம் நூற்றாண்டில் காரைக்காலம்மையார்,

" திறத்தான் மடநெஞ்சே சென்றடைவ தல்லால் " (47)

என்று அற்புறத் திருவந்தாதியில் கூறியருளினர். பிற்சங்க நூலெனத்தகும் கலித்தொகையில்,

" ஆயிழாய், நின்கண் பெறினல்லால் இன்னுயிர்
வாழ்கல்லா
என்கண் எவனோ தவறு " (88)

என வந்துள்ளது. இவ்வகை வழக்கு இன்னும் மூன்றிடங்களிலும் ( 15, 83, 102 ) புலப்படுகின்றது. இந்நூலிற் போலும் 'ஆனல்' என்பது காணப்படவில்லை. முற்குறித்த சொல்வழக்கின் காலத்தோடு ஒட்டியே இக்கலித் தொகையின் காலமும் இருத்தல் வேண்டும். ஆகவே இது தோன்றியது 4-ஆம் நூற்றண்டின் இடைப்பகுதி எனக்கொள்ளலாம். வள்ளுவர் 'அல்லால்' என்பதை மிகுதியாக எடுத்தாள்வதினாலும், சங்க நூல்களில் யாண்டுங் காணப்படாத 'ஆனல்' என்பதனை ஆளுதலினாலும் இவரை 5-ஆம் நூற்றண்டினரென்று கொள்ளுதல் நேரிதாகலாம்.

எதிர்மறை வினையெச்சப் பொருளில் வரும் வேறு சில ஈறுகளை நோக்கினும் இம்முடிபே வலியுறுகின்றது. 'மல்' என்னும் ஈறு தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களில் இல்லை. உரைகாரர்களுள்ளும் சேனவரையரும் நச்சினர்க்கினியரும் இவ் ஈற்றினைக் குறிக்கின்றனர் " கூறுமை நோக்கிக் குறிப்பறிவான் " ( குறள்-701 ), " காணமையுண்ட கடுங்கள்ளை ( கலி. 115 ) முதலிய பிரயோகங்களை நோக்குமிடத்து எதிர்மறைப் பெயரீருகிய 'மை' என்பது முதலில் எச்சப்பொருளில் வழங்கிற்றுதல் வெளிப்படை. இதுவே, 'மல்' எனவும்,

மிகப் பிற்பட்ட காலத்து ‘மே’ எனவும் திரிந்து வழக்கிற் புகுந்தது. ‘மல்’ என்பது சங்க நூல்களிற் பிற்பட்ட கலித்தொகையில்[1] காணப்படுகிறது. இதனிலும் பிற்பட்ட காலத்தவையாகிய தேவார திருவாசகம்[2] முதலியவற்றில் ‘மே’ காணப்படுகின்றது. திருக்குறளில் ‘சூழாமல்’ (1024), ‘செய்யாமல்’ (101, 313) என்ற வழக்குகள் உள்ளன. இவையும் இந்நூல் கடைச் சங்கத்திற்குப் பிற்பட்ட காலத்தது என்பதை யுணர்த்துகின்றன.

இங்ஙனமே வேறு சிலவகை யீறுகளும் மேலே முடிபினையே வற்புறுத்துகின்றன. ‘எனின்’ ‘எனில்’, ‘ஏல்’ என்ற மூன்று ஈறுகளும் ஒன்றினின்று ஒன்று முறையே தோன்றியனவாம். இவற்றுள் ‘எனின்’ ‘எனில்’ என்பவை னகர-ஈறு லகர-ஈறாகத் திரிந்துவந்த ஒரு பெருந்தொகுதிச் சொற்களின் பிரதிநிதியெனக் கொள்ளத்தக்கன. ‘உணின்’, ‘உணில்’ (குறள் 922) எனவும், ‘எண்ணின்’ ‘எண்ணில்’ எனவும், ‘கூறின்’ ‘கூறில்’ எனவும் வருவனவாகியவற்றைக் கருதினால் தமிழின் ஒலியியலில் ஒரு காலத்து இம்மாறுபாடு பெருவரவிற்றா யிருந்தமை அறியப்படும். ‘எனில்’ என்பது ‘ஏல்’ எனத்திரிந்தது ஒலி வரலாற்றோடு ஒத்ததேயாம். இரண்டு குறிலுக்கு மாறாக ஒரு நெடில்வந்து ஒலி நிரப்பிச் சொற்கள் பயின்றுள்ளமை யாண்டுங் காணப்படுவதேயாம். ‘பகுதி’ - ‘பாதி’, ‘பெயர்-‘பேர்’ முதலியவற்றை

1. கூறாமற் குறித்ததன்மேற் செல்லும் கடுங்கூளி (கலித். 1)
2. கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்-சம்பந்தர் சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்- அச்சோ, 2

நோக்குக. இந்த ஏல் என்னும் எச்ச ஈற்றை முன்னிலை யெதிர்மறையில் வரும் 'அல்' (மகனெனல்), 'ஆல்' (அழாஅல்), 'ஏல்' (செய்யேல்) என்ற வரிசையில் வரும் 'ஏல்' என்பதினின்றும் வேறுபிரித்துணர்தல் வேண்டும். எச்ச ஈருகிய 'ஏல்' சங்க நூல்களில் யாண்டும் காணப்படாதது; சொல்வரலாற்றில் பிற்படத் தோன்றியது. இவ் 'ஏல்' திருக்குறளில் காணப்படுகின்றது. உதாரணமாக,

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம் (386)

என்ற குறளில் 'அல்லனேல்' என்பது வந்துள்ளது. இங்ஙனமே 'இன்றேல்' (556, 573, 575, 996, 1014, 1144), 'உண்டேல்' (368, 1075, 1151), 'செய்வானேல்' (655) 'வல்லையேல்' (1118) முதலிய சொற்களும் திருக்குறளில் வழங்கியுள்ளன. இவ்வழக்குக்களும் இந்நூல் சங்ககாலத்திற்குப் பிற்பட்ட தென்பதை நன்குணர்த்துகின்றன.

பிற்காலத்தெழுந்த பிறிதோர் ஈற்றினை மட்டும் இங்கே கூறி அமைகின்றேன். தொல்காப்பியர்

கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே (சொல். 69)

என்று கூறுகின்றனர். இதனுல் அஃறிணையியற்பெயர் 'கள்' விகுதி பெற்றுப் பன்மைப் பொருளை யுணர்த்து மென்பது பெறப்படுகின்றது. உதாரணம்: நாய்கள், குதிரைகள். உயர்திணைக்கு இவ்விதி விதிக்கப்படவில்லை. உயர்திணைக்கண் 'கள்' வரும் வழக்குச் சங்க நூல்களிற் காணப்படவுமில்லை. 11-ஆம் நூற்ருண்டினதாகிய வீரசோழி

யம் 'கூறிய சொற்பின்' (33) என்று தொடங்கும் காரிகையில் பலர்பாற்கண் 'கள்' வருதல் சிறப் பின்றென அறிவுறுத்துகிறது. நேமிநாதத்தில்

கள்ளொடு வந்தா லிருதிணைக்கும் பன்மைப்பால்
ஒள்ளிழாய் தோன்றலு முண்டு (சொல்-6)

எனப் பொதுப்படச் சூத்திரம் காணப்படுகிறது: இந்நூல் சங்க காலத்திற்கு மிகப் பிற்பட்ட நூல். இதன் உரைகாரர் 'உயர்திணை ஒருமைப் பெயரும் ஒரோவழிக் கள்ளொடு வந்தால் பன்மைப்பால் தோன்றுவனவும் உள' என்று கூறுகிறார். எனவே உயர்திணைப் பன்மையில் 'கள்' வருதல் தம் காலத்து அருகித்தோன்றிய வழக்கென்பது அவர் கருத்தாகல் வேண்டும். நன்னூலில்

கிளந்த கிளைமுத லுற்றரவ் வீற்றவும்
கள்ளெ னீற்றி னேற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும் (சூ-277)

என யாதொரு நியதியுமின்றி உயர்திணைப் பன் மையிற் 'கள்' வருதல் உணர்த்தப்படுகிறது.

இப் பலர்பால் விகுதியைத் திருக்குறள் எடுத் தாளுகின்றது. உதாரணமாக

வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு ( 919 )

என்பது வரைவின் மகளிர் என்னும் அதிகாரத்தில் வந்துள்ள ஒரு குறள். இங்கே 'கீழ்மக்கள்' என்று பொருள்படும் 'பூரியர்' என்ற சொல்'கள்' விகுதி புணர்த்து வழங்கப்பட்டுள்ளது. இங்ஙனமே

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம் ( 263 )

என மற்றையவர் என்பது ' கள் ' விகுதி புணர்த்து ஆளப்பட்டது. ஆகவே, சங்க காலத்தில்லாது பிற்பட்ட காலத்துப் புகுந்த இவ்வழக்கு வள்ளுவர் திருக்குறளில் காணப்படுதலாலே, திருக்குறளும் சங்க காலத்துக்குப் பிற்பட்ட நூல் என்பது தெளிவாம். நாவுக்கரசு ' செல்வர்கள் ' ' அமரர்கள் ' (V–65) என ஆட்சி புரிந்துள்ளார். காரைக்காலம்மையார் ' உற்றூர்கள் ' என ஆண்டனர் (திருவிரட்டைமணி 20). 5-ஆம் நூற்றாண்டின் முன்னர் இவ்வழக்குக் காணுதலரிது. எனவே, சுமார் கி. பி. 450-இல் திருக்குறள் தோன்றியதெனக் கொள்வோமாயின், அது உண்மையொடு பட்டதாகவே இருக்கலாமெனத் தோன்றுகிறது.

பிற்சேர்க்கை – II

# திருக்குறள் பொருட்பால் : முகவுரை*

**திரு. தி. பொ. பழநியப்ப பிள்ளை, M. A.**

[ ஆராய்ச்சித்துறைத் தலைவர், திருவேங்கடேசுவரன் கீழ்க்கலை ஆராய்ச்சிக் கழகம், திருப்பதி. ]

" வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும். "

என்பதில் பரிமேலழகர் ' ஒருவந்தம் ' என்பதற்கு ஒரு தலையாக என்று பொருளெழுதிப் பின்னர் விளக்குகின்றுழி, " ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தம் என்பன ஒரு பொருட்கிளவி " என்றுரைத்தார்; ' ஒருவந்தம் ' என்ற இச்சொல்லே பயின்ற பிறிதொரு குறட்பாவில் (593 ஆக்கமிழந்தேம்) இதற்கு ' நிலைபெற்ற ' என்ற வேறு பொருள் கூறினர். இவர்க்கு மாருகக் காலிங்கர் இவ்வருகிய சொல்லுக்குப் ' பெருஞ் செல்வம் ' என்று அவ்வீரிடத்தும் ஒப்ப ஒரே பொருள் கூறினர். இதன் சிறப்பு அறிஞர் நோக்கிக் கொள்ளக்கடவர்.

---

* இது, திருக்குறள் - பொருட்பாலுக்குக் காலிங்கர் - பரிப்பெருமாள் உரைகளைக்கொண்ட நூலின் முகவுரையில் எழுதப்பட்டுள்ள ஒரு பகுதியாகும், இது முதற் பிற்சேர்க்கையில் உள்ளவற்றை மறுத்து எழுதப்பட்டதாகும்.

பரிமேலழகர் ' ஒருவந்தம்' என்பதற்கு உரைத்த விசேடம் பற்றிச் சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழாராய்ச்சித் துறைத்தலைவராயிருந்த பேரறிஞர் இராவ்சாஹிப் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்கள் B. A., B. L. அண்மையில் தாம் பதிப்பித்த திரிகடுகம்-சிறுபஞ்சமூலச் சுவடியின் முன்னுரை 15-ஆம் பக்கத்தில் எழுதியதனை இயைபு பற்றி ஈண்டைக்கு அறிந்து கொள்ள வேண்டும். அது வருமாறு : " ......தனிமொழியேயன்றி ஆதி பகவன் என்ற இருமொழித் தொடரும் வள்ளுவரால் கையாளப்பட்டது. இது போன்ற வடமொழி வழக்கும் சங்க இலக்கியங்களில் காணுமாறில்லை. ஒருவந்தம் ( 563, 593 ) என்ற சொல் வள்ளுவரில் இரண்டு இடங்களில் உள்ளது.

இச்சொல்லில் ஒரு என்பது தமிழ் ; அந்தம் என்பது வடசொல். இவ்விரண்டும் இயைந்து ஒரு சொன்னீர்மைப்பட்டு வடமொழியிலுள்ள ஏகாந்தம் என்பதற்குரிய கலவைச் சொல்லாக (Hybrid) தமிழில் ஆளப்பட்டுள்ளது. இக்கலவை ஆட்சியும் சங்க நூல்களில் காணப்படாததொன்ரும். இங்குக் காட்டியனவெல்லாம் வடசொற்களை எடுத்தாளுதலில் வள்ளுவர் விரிந்த மனப்பான்மை உடையவர் என்பதை நன்கு தெரிவிக்கின்றன. இம் மனப்பான்மையும் சங்க காலத்தின்றிப் பிற்காலத்துத் தோன்றியதேயாம். இவற்ருலும் சங்க காலத்திற்குப் பிற்பட்டவர் வள்ளுவரென்பது நன்கு உணரக்கிடக்கின்றது…எனவே, சுமார் கி. பி. 450-இல் திருக்குறள் தோன்றியதெனக் கொள்ளுவோமாயின், அது உண்மையொடு பட்டதாகவே இருக்கலாமெனத் தோன்றுகிறது," என்றெழுதினர்கள்.

மற்று இவர்கள் அம்முன்னுரையின் 14-ஆம் பக்கத்தில் சங்கச் செய்யுட்கள் கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டிலியற்றப்பட்டனவென்று முடிவுரைத்திட்டார்கள். அதன்படி எட்டுத்தொகையுள் முதல் நூலாகிய நற்றிணையும் இறுதி நூல் ஆகிய புறநானூறும் அக்காலத்தனவென்பது ஐயப்பாடின்றி நிலைபெறுகின்றது. ஆயின், இத்தொகை நூல்கள் திருக்குறள் பாக்களை எடுத்தாண்டும் அந்நூலினைத் தெளிவாய்ச் சுட்டியும் சென்றவாயின், அத் தொகை–நூல்களின் காலத்துக்குத் திருக்குறள் முற்பட்டதென்று உடன்படல் வேண்டுமன்றே! அவை திருக்குறளை யாண்ட இடங்களைச் சுட்டுகின்றேன் : காண்மின்!

1 " முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பி
னஞ்சு முண்பர் நனிநா கரிக
ரஞ்சி லோதியென் றோழி தொட்டுயி
னெஞ்சி னின்புரு யாயினு மதுநீ
யென்க ணோடி யளிமதி " - நற்றிணை - 355

இந்நற்றிணைப் பாடற்பகுதியில் தலைவனைத் தோழி அருகடுத்து வரைவுகடாவுவாளாய் நின்று நீதி நெறிமொழியு முறையில் தன்பாற் கண்ணோடிச் செய்தல் வேண்டுமெனத் தமிழ்ப்பேரற நூற்கட்டளையை எடுத்துக்கூறியது காண்மின். ஈண்டு ;

" பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் " (580)

என்னும் திருக்குறள் நூலின் ' கண்ணோட்டம் ' என்ற அதிகாரத்துள்ள பாடலை எடுத்து அமைத்துள்ளமை நோக்குமின்.

2. " நீயுங் கண்டு நுமரொடு மெண்ணி
யறிவறிந் தளவல் வேண்டு மறுதற்
கரிய வாழி தோழி! பெரியோர்
நாடி நட்பி னல்லது
நட்டு நாடார்தம் மொட்டியோர் திறத்தே"
-நற்றிணை 32

ஈண்டு, தோழி தலைவிக்குக் குறை நயப்புரைப்புழி அறநெறி வற்புறுத்துவாளாய் அறநூற் பொருளைச் சுட்டிக் காட்டுதல் காண்மின். இது கபிலர் பாடிய தெனின், அதன் சிறப்புமிக்கதன்றோ? இப்பகுதியில் திருக்குறளின் நட்பாராய்தல் அதிகாரத்துள்ள,

" நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு" (791)

என்ற குறள் எடுத்தாளப்பட்டமை தேர்மின். இனி, புறநானூறுப் பாட்டு ஒரு சில காட்டுகின்றேன் :

3. " ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
வறம் பாடிற்றே" -புறம் 34

இதன்கண் திருக்குறள் - அறத்துப்பால் - செய்ந் நன்றியறிதல் அதிகாரத்துள்ள,

" எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (110)

என்ற பாடலைச் சுட்டியதன்றி, அந்நூல் 'அறநூல்' என்றும், அது வடநூற்கண் உரை வகையான்

அறமுரைத்தல் அமைந்தமை போலாது தமிழ்ப் பாடலான் அமைந்ததென்றும் தெளிதருமாறு ‘அறம் பாடிற்றே’ என்று விளங்கக் கூறித் திருக்குறளைப் போற்றுதல் காண்மின்! அகனும் புறனும் பற்றித் தனித்தனிச் செய்யுளே பாடும் வழக்கானும் இயனூல் யாத்தல் வழக்கானுமே நிகழ்ந்த அக்காலத்து அறப்பெரு நூலாகத் தமிழ் மொழிக்கண் திருக்குறள் விளக்கம் பெற்றமை பற்றியன்றே, ஆலத்தூர் கிழார், தம் பெருமுறை யறநூலை அங்ஙனம் பாராட்டிக் கூறுவாராயினர்.

4. மேலும், புறநானூறு 35-ஆம் பாட்டிலுள்ள

“அறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீண்
டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே”

என்ற பகுதி, திருக்குறள் - செங்கோன்மை அதிகாரத்துள்ள,

“வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி” (542)

முதலிய குறட்பாக்களின் கருத்தமைதி யுடையதன்றோ ?

5. கபிலர் மலையமான் திருமுடிக்காரியை நோக்கி,

“ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே: பெரிது
மீத லெளிதே: மாவண் டோன்ற
லதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே.”

—புறம். 121

என்ற பொருண்மொழி கிளந்தது.

திருக்குறளாசிரியர் அரசன் தன் சுற்றந் தழு வலிற் பெருநோக்குடையனுதல் வேண்டும் என வற்புறுத்துரைத்த

" பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர் " (528)

என்ற பொய்யாப் பொன் மொழியைப் போற்றி யுரைத்ததன்றே ?

6 " ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்ருே னெனக்கேட்ட தாய் " (69)

என்ற குறளின் சொல்லும் கருத்தும் " நரம் பெழுந்துலறிய " என்று தொடங்கும் புறப்பாட் டின் (278) இறுதியடியிற் போற்றியுரைத்தமையும் நோக்குக. கலித்தொகையினும் பல குறட்பாக்கள் ஆட்சியுண்டு : காண்க.

பிள்ளையவர்கள் கி. பி. முதலாவது நூற்ருண் டின என்று அறுதியிட்டுரைத்த சங்கச் செய்யுட் கள் மேற்காட்டியவாற்ருல் திருக்குறளின் சொல் லும் பொருளுந் தோன்றி விளங்க எடுத்தாண் டமையால், திருக்குறளும் திருவள்ளுவனும் அக் காலத்துத் திகழ்ந்தமை புலப்பாடன்ருே ? அவர் கள் இதனை உள்ளங்கொள்ளா தயர்ந்து, திரு வள்ளுவர் கி. பி. 450 ஆண்டிற்குப் பின்னர் வாழ்ந் தனரென்பது வியப்பும் நகைப்புந் தருகின்றது. இனி வள்ளுவனுரைச் சைன முனிவராகிய ஏலா சாரியாரென்பாரும் சைனு சாரிய பட்டாவளிப்படி அவரைக் கிறிஸ்து பிறந்து வாழ்ந்த முதல் நூற் ருண்டின ரென்றன்றே நிறுவுகின்றனர் ? இதனை யும் பிள்ளையவர்கள் காற்றிற் பறக்கவிட்டுப் பரிமே

லழகர் காட்டிய சொல்மரபின் நெறிமேலழகராய்த் தனிச்சொல்லாராய்ச்சி செய்து மெய்ம்மை காணு தொழிந்தார்கள்.

பரிப்பெருமாள் 'ஒருவந்தம்' என்பதற்கு ஈரிடத்தும் வேறுபாடின்றி 'ஒருதலையாக' என்றே பொருள் கூறினர். பரிமேலழகர் அப்பொருளை ஓரிடத்துக்கொண்டு அச்சொல் வழக்கை யாய்ந்து காண்பாராகித் தமக்கு இயல்பானமைந்த வடநூற் புலமைப் பற்றால் ஒரு வந்தம் என்பது 'ஏகாந்தம்' என்ற வட சொற்றொடர் போன்றதென்று மயங்கி யெண்ணித் தம் விசேடவுரையுள் அதனைப் பெய்து விட்டார். வடமொழியிற்றானும் ஏகாந்தம் என்பது தனித்த, அதிகமான என்ற பொருளதன்றி ஒரு தலையான, நிலைபெற்ற என்ற பொருளில் வழக்குடையதன்று. தமக்கு முற்பட்ட காலிங்கர், 'பெருஞ்செல்வம்' என்று பொருளெழுதியதனை அறியாமையின், திரிவுபட எழுதினர்போலும். ஒருக்கால் ஏடெழுதுவோர் பிழைபட எண்ணி 'ஏகாந்தம்' என்ற வடசொற்றொடரைப் பரிமேலழகர் விசேடவுரையிற் பிணைத்தனரோ தெரிகின்றிலேன். பரிமேலழகர் விசேடவுரை கொண்டு பிள்ளையவர்கள் 'ஒருவந்தம்' என்பது ஒரு என்ற தமிழ் எண்ணுத் திரிபெயரும் அந்தம் என்ற வட சொல்லும் கலப்புற்றுக் கலவைச் சொற்றொடரா யின வென்று கூறி, வள்ளுவனார் 'ஒருதலை' என்ற பொருளில் அதனை வழங்கினர் என்றார்கள். வள்ளுவனார்க்கு அது கருத்தாயின், தாம் பிறண்டும் 'ஒருதலையானின்னாது காமம்' 'ஒருதலையாவுட் கோட்டமின்மை' என்று வழங்கியவாறே, அச்செந் தமிழ்த் தொடர்மொழி 'ஒருவந்தம்' என்ற கல

வைச் சொற்றொடரினும் பொருட் டெளிவுடைத் தாதலின் அதனையே அவ்விரு குறளினும் வழங்கி யிருப்பரன்றோ? அங்ஙனம் வழங்குமிடத்து 'ஒரு வந்தம்' என்ற சீர்போன்றே 'ஒருதலையான்' என் பதும் செய்யுளோசை சிதையாமை நின்று அமையு மன்றே? இனி அதனை வழங்காது, 'ஒருவந்தம்' என்ற தமிழ்த் தனிமொழியை வழங்கியது, காலிங் கர் கூறியவாறு அது 'பெருந்திரு' என்ற பொருட் பேறுடையதாதல் பற்றியேயாமென நன்குணர்தல் வேண்டும். அச்சொல் வள்ளுவனார் காலத்தே வழக்காற்றின் நிலைத்துப் பின்னர் அருகியது போலும். தமிழாசிரியருட் பிறரெவரும் பொருந்தப் புணர்க்காத இவ்விருமொழிக் கலவைச் சொற் றொடரை வள்ளுவனார் வழங்கினாரென்று காட்டிய பிள்ளையவர்கள் சொல்லாராய்ச்சி பெரிதும் வியப்புச் செய்யாநின்றது.

பெரும் பொருட்டிறங்களைத் தமிழ் மொழியாற் கூறித் தமிழகத்து நன்மக்கட்குப் புலம்பெருகச் செய்யும் பெருந்தொண்டிலீடுபட்ட வள்ளற் பெரு மானாராகிய வள்ளுவனார், தமிழ்மொழிமரபு பிழைக்க நூல் யாத்தல் செய்யார். அவரியற்றிய ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களிலும் ஓரறுபதின் மிக்க தனிவட சொற்களில்லை. அறநூற் பொருளும், அரசியற் பொருளும், அளவைநூற் பொருளும், ஆகமப் பொருளும், மருத்துநூற் பொருளும், பிறவும் செறியக்கூறிய அந்நூலின் நூற்று முப் பத்து மூன்று அதிகாரங்களில் ஒன்றிலேனும், தனி வடசொற்களாகிய தவம், தூது, அமைச்சு, மானம் என்பன வொழிய அவற்றுக்குரிய வடசொற் றொடர்ப் பெயர் ஒன்றேனும் உளதோ? இனி நூன்

முழுதும் தேடிக்காண்கினும் 'ஆதிபகவன்' என்ற ஒரே வடசொற் றொடரன்றிப் பிற வடசொற்றொடர் களைக் காண்கின்றிலம். 'தானந்தவ மிரண்டுந் தங்கா', 'தவமுந் தவமுடையார்க்காகும்' என்பன தாமும் பிரி சொற்றொடர் நிலையாய்ச் செவ்வெண், எழுவாய்த் தொடர்நிலை முறையின் வேறுபட நிற் றலின் தொடர்ப்பாடுறு வனவல்லவே! இவ்வொரு வடசொற்றொடர்தான் பிள்ளையவர்கள் காட்சியில் திருவள்ளுவர் வடசொற்றொடர் வழக்கில் தாராள மனப்பான்மையுடையரெனக் கூறச் செய்தது போலும். புறநானூற்றுப் பாடல்களிலும் அமரர், ஆவுதி, கணம், கரகம், கவுரியர், பிண்டம், பூதம், மண்டிலம், யூபம், வேதம் முதலிய வடசொற்களும், 'அவிர்சடை முனிவர்' (43), 'இந்திரரமிழ்தம்' (182) என வடசொற்றொடரும், ஒருதிசை, நாற்றிசை, குடதிசை எனக் கலவைச் சொற்றொடரும், பாசி, ஊசி, என்ற பாகதங்களும், 'த்ரேதாக்நி', 'சதுர் வேதா, பார லௌகியை சுவரியம்' என்பவற்றின் மொழிபெயர்ப்பாகும் 'முத்தீ' 'நால் வேதம்' 'செல்லுமுலகத்துச் செல்வம்' என்பனவும் வந்துள் ளனவே. அகநானூற்றினும் 'தென்றிசை மாதி ரம்' (281) என்ற வடசொற்றொடரும் 'மணிப்ர வாளம்' என்ற வடசொற்றொடரின் மொழிபெயர்ப் பாகிய 'மணிமிடை பவளம்' (304), 'மணிமண்டு பவளம்' (374), என்பனவும் வந்துள்ளனவன்றோ? நற்றிணையினும் மண்டிலம், சடை, தவசியர், கம்மி யர், பூதம், தெய்வம், சதுக்கம், கணம், யாமம் என்ற வடசொற்களுள்ளன. குறிஞ்சிக்கலியில் 'வாரண வாசிப்பதம், என்றும், பரிபாடலில் 'தவப்படிவம்' (15), 'பதிவதம்' (10) என்றும் வடசொற்றொடர்

களுள்ளன. இவற்றை முதல் நூற்றுண்டு வழக்கு எனப் பிள்ளையவர்கள் காணுமை என்னே? வட சொற்றொடர் வழக்குச் சங்க நூல்களில் அருகியது போன்று இவர் நூலினும் அருகியதாயிற்று. ஆதி பகவன் என்பதனை மட்டும் ஐந்தாம் நூற்றுண்டு வழக்கென்பது என்னை? ஆதிபகவன் எனப் பாட மும் உளது என்பர் சிலர். இவ் வடசொற்றொடர் வழக்குச் சங்கநாளில் இல்லை யாதலின் வள்ளுவர் அந்நாளில் வாழவில்லை என்பது பெறப்படுகிறது என்று பிள்ளையவர்கள் காட்டும் எதிர்மறை வழியளவையினும், இவ்வழக்கு அந்நாளில் உண்டாதலின் அவர் அக்காலத்து வாழ்ந்தார் என எளியேன் நிறுவும் உடம்பாட்டு வழியளவை வலிது ஆதலைத் தருக்க நெறியறியும் புலவர்கள் காணல் வேண்டும். வடசொற்றொடர்களைப் பெரிதும் வழங்கிய சைவ வைணவப் பெரியார்கள் காலத்தை யடுத்துச் சற்று முன் கி. பி. 5 ஆவது நூற்றுண்டில் வள்ளுவனுர் வாழ்ந்தார் என்பதற்கு இந்த 'ஒருவந்த' ச் சொல் லாராய்ச்சியை ஏதுவாகக் கொள்ளாது வள்ளுவர், நாயனுரென்ற வடசொற் பெயரால் வழங்கப்படு கிருர்: அறுபான் மும்மைச் சைவ நாயனுர்கள் காலத்தை யடுத்தே வாழ்ந்தனு ரென்பதற்கு இப் பெயர் வழக்குச் சான்ருகு மென்று கூறிவிடலாமே! இதுவும் சொல்லாராய்ச்சி யன்ருே?

பிற்சேர்க்கை–III*

# திருவள்ளுவர் காலமும் திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் கொள்கையும்

உயர்திரு. ச. சோமசுந்தர பாரதியார் M. A., B. L.

...செந்தமிழ் 43-ஆம் தொகுதியின் முதற் பகுதியில் வள்ளுவர் குறள் மிகப்பிற்கால நூலெனச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராய் நிலவிய இராவ்சாஹிப், திரு. S. வையாபுரிப் பிள்ளையவர்கள் வானொலியிற் பேசிய உரை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வுரையில் ஒரு பாதி, குறள் தொல்காப்பியர் நூலுக்குப் பிந்தியும் நாலடி நானூற்றுக்கு முந்தியும் இயற்றப் பட்டதெனக் காட்டப் பல காரணம் கூறுகிறது. மற்றொரு பாதி, தமிழரிடை "ஒழுக்க நிலையை மிகப்பரப்பிய சமணர் முயற்சியிற் கனிந்து" வடமொழி நூல்களை வடித்தெடுத்துத் தேவார காலத்தில் திரட்டப்பட்டது திருக்குறள் என்று காட்ட அரும்பாடுபடுகிறது.

இவ்விரண்டில் முன்னது முழுதும் வீண் முயற்சி ; தொல்காப்பியர் வள்ளுவர்க்கு முந்தியவர் என்பதில் ஐயமுறும் தமிழறிஞர் எவருமில்லை.

---

* "செந்தமிழ்", தொகுதி 45, பக். 21–30. (1947)

இறவாமல் எஞ்சி நிற்கும் தமிழ் நூற்கெல்லாம் தொல்காப்பியர் நூல் காலத்தால் முற்பட்டதென் பது, தமிழன்றி வடமொழி வல்லாரும் மறுக்ககிலா உண்மையாகும்.

தொகை நூல்களனைத்துக்கும் மிகப் பின்னே நெடியதொரு நூற்றாண்டு முடிந்ததன்மேல் தொல் காப்பியர் நூல் பிறந்ததென்று பிள்ளையவர்கள் கூசாமல் பேசுகின்றார்கள். அது பொருந்தாமை யும் தொல்காப்பிய நூலின் பழமையும் விளங்க யான் ஆங்கிலத்திலும் தமிழிலும் முன்பே எழுதி வெளியிட்ட கட்டுரைகளிற் கண்டு தெளிக. இப் போது தொல்காப்பியருக்குப் பிற்பட்டவர் வள்ளு வர் என்பது ஊகிக்க வேண்டாத உண்மையென்று உடன்படுவோம்.

ஆனால், தொல்காப்பியர் காலம் எது? அவ ருக்கு எவ்வளவு காலத்துக்குப் பிறகு குறள் பிறந் தது? இவ்வினாக்களுக்குத் தக்க ஆதரவோடு விடை தராமல் பிள்ளையவர்கள் தம் கூற்றை ஊக வாகனமேற்றி மாகவிசும்பில் உலவச் செய்கின்றார் கள். அவ்வூகங்கள் வருமாறு:-

தொகை நூல்கள் கி. பி. இரண்டாம் நூற் றாண்டு முடிவதற்குமுன் தோன்றின என்னும் பழைய முடிபை உடன்பட்டுக்கொண்டே கி. பி. மூன்றும் நூற்றாண்டு கழிந்த பிறகே தொல்காப் பியர் நூல் எழுந்ததென்று ஏது யாதுமில்லாமல் துணிகின்றார்கள்: அதன் பிறகு 'கி. பி. அறுநூறில் குறள் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்'-என்றும் ஊகிக்க முனைகின்றார்கள்.

இனி, குறள் நாலடியார்க்கு முற்பட்டதென் பதையும் ஒப்புக்கொள்வோம். ஆனால், "நாலடியாரின் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப் பாதி"; அதாவது கி. பி. 650. குறள் அதற்கு அரை நூற்றாண்டுக்கு முற்பட்டது. ஆதலினால் "குறட் காலம் கி. பி. 600" எனத் துணிகிறார்கள். அத் துணிவுக்கு அவர்கள் கூறும் காரணம் நாலடிப் பாட்டு இரண்டில் முத்தரையர் சுட்டப்படுவதே. "நாலடியாரில் குறிக்கப்பட்ட முத்தரையன் பெரும் பிடுகு முத்தரையனே எனக்கொள்ளலாம். இவன் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பாதி, ஆகவே நாலடியாரும் கி. பி. 650-இல் இயற்றப் பட்டிருக்கவேண்டும்", என்கிறார்கள். இத்துணிவுக்குப் பிள்ளையவர்கள் தம் ஊகமன்றிப் பிறசான்றெதுவும் காட்டவில்லை.

நாலடிப் பாட்டிரண்டும் ஒருமையும் பெயரும் குறியாமல் ஒருகுடிப் பலர்கொடைப் பெருமையைப் பேசுகின்றன.

> "பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
> கருனைச்சோ றார்வர் கயவர்" (200)

எனவும்,

> "பெருமுத்தரையரே செல்வரைச் சென்றிரவாதார்" (296)

எனவும் அப்பாட்டுக்கள் கூறுகின்றன.

முத்தரையர் என்பது பல்லவர், சோழர், பாண்டியர் என்பதுபோல ஒருகுடிப் பலருக்குப் பொதுப் பெயர். மேற்குறித்த பாடல்களில் முத்தரையருள் தனி ஒருவனைச் சுட்டும் இயற்பெயரோ, சிறப் பியல்போ எதுவுமில்லை. பழந்தமிழ்ப் பாட்டில்

ஒருவனைச்சுட்டும் மரியாதைப் பன்மை வழக்கில்லை ; மரபும் இல்லை. ஆகவே, நாலடியாரின் காலத்தை வரையறுக்க வழியில்லை ; அதைக் கொண்டு திருக்குறளின் கீழெல்லை தெளிவதும் எளிதன்று.

இவ்வாறு பிறநூல் வரலாறு குறள் பிற்பட்டதென்பதை நிறுவப் போதாமையுணர்ந்து வேறு சில கூறுகிறார்கள். அவற்றையும் ஆராய்வோம் :

பிற்காலத்திற் கீழ்க்கணக்கு வரிசையில் வள்ளுவர் குறளும் ஒன்றாக எண்ணப்படுகிறது. "கீழ்க்கணக்கு நூல்கள் மிகமிகப் பிற்பட்ட காலத்துத் தோன்றியன என்பது உறுதியாகும். ஆதலால், சங்க இலக்கிய காலத்திற்கும் கீழ்க்கணக்கு நூல்களின் காலத்துக்கும் இடையே 3 அல்லது 4 நூற்றாண்டுகள் சென்றிருத்தல் வேண்டுமென ஒருவாறு ஊகிக்கலாம்" என்பது பிள்ளையவர்கள் வாதம்.

பழமொழி போல்வன சில பிற்காலத்தனவாக இருக்கலாம். அதனால் கீழ்க்கணக்கெனப் பிற்காலத்தார் தொகுத்தெண்ணும் பதினெட்டும் கி. பி. 600-க்குப் பிற்பட்டவை என ஊகிப்பது எப்படி ? அவையனைத்தும் ஒரு காலத்தவை என்று யாரும் என்றும் கூறியதில்லையே ! அதற்கு மாறாக, வள்ளுவர் கடைச்சங்க காலத்தவர் என்பதும், கீழ்க்கணக்கு நூல்களுள் எண்ணப்படும் களவழி பாடிய பொய்கையாரும் இன்னா நாற்பதியற்றிய கபிலரும் அச்சங்கப் புலவர் என்பதும் தொன்றுதொட்டுப் பழம்புலவர் பலரும், பழைய உரைகாரரும், கம்பருக்கு முந்திய சயங்கொண்டார், கூத்தர் போல்பவரும் கூறியுள்ள செய்தியாகும். அவரனைவரையும்

மறுத்துப் பிற்காலத்தார் கீழ்க்கணக்கு வரிசையிற் குறளையும் கூட்டி யெண்ணியதனால் மட்டும் அதைக் கி. பி. 600-இல் இயற்றப்பட்டதெனத் துணிய முடியுமா? கீழ்க்கணக்குகளெல்லாம் ஒரு காலத்தன அல்ல என்பதும், தொடர்பின்றிப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பின்னாகத் தோன்றிய அவற்றிடைச் சில பொதுவியலுண்மையால் அவற்றைக் கீழ்க்கணக்குகள் எனத் தொகுத்துக் கூறியது மிகப் பிற்காலத்தில் என்பதும் யாவருக்கும் உடன்பாடு. எனவே, குறள் கீழ்க்கணக்கு நூல்களுக்கெல்லாம் முந்தியதென்பது ஒருதலையாவதன்றியும், கி. பி. 200-க்கு முந்திய என்று பிள்ளையவர்கள் கூறும் தொகை நூல்களுக்கும் முந்தியதென்பது, அவற்றில் குறள் எடுத்தாளப்படுதலால் ஒருதலையாகத் தெளியப்படும்.

"தொகைநூல்களிற் பயிலாதனவும் தொல்காப்பியர் சொல்லாதனவுமாகிய புதிய அன், கள், மல், ஏல், மே எனும் விகுதிகளும்; அல்லால், ஆனால், போழ்து எனும் சொல்லுருவங்களும் குறளிற் புகுந்துள்ளன. ஆகையால் குறள் கி. பி. 200-க்கு முந்திய தொகைநூல்களுக்கும் கி. பி. 300-க்குப் பிந்திய தொல்காப்பியர் நூலுக்கும் பல நூற்றாண்டுகளுக்கு, அதாவது, கி. பி. 600-க்குப் பின் எழுதப்பட்டிருக்க வேண்டும்" என்பது பிள்ளையவர்கள் கூற்று. இது வாதப்போலி.

பிள்ளையவர்கள் எடுத்துக்காட்டும் ஈறுகளும் சொல்லுருவங்களும் புதியவையல்ல; அவர்களே கி. பி. 200-க்கு முந்திய தொன்மைதரும் தொகை நூல்களில் இவை வழங்கியுள்ளவை. அன்றியும்,

முதலில் ஒரு நூலில் விதந்து சொல்லாத எல்லாம் அந் நூற்காலத்து இல்லாதவை யென்பது ஏதவாதம்.

தொல்காப்பியர் வேற்றுமை யுருபுகளை யெண்ணுமிடத்து மூன்ருவதற்கு ஆனுருபு உண்டென்று கூறவில்லை. ஆயினும், தொல்காப்பியருக்கும் முந்தியவாகப் பிள்ளையவர்கள் பேசும் தொகை நூல்களிலும் தொல்காப்பியர் நூலிலுமே அவ்வுருபுண்மை தெரிகிறது.

" குஜ ஆன்என வரூஉம் இறுதி
அவ்வொடு சிவணும் செய்யு ளுள்ளே."
( தொல். சொல். வேற்றுமை மயங்கியல் 25 )

என்பது காண்க.

அவர் நூலிலே குறிப்பு வினைகளைக் கூறுங்கால் உண்டு' என்பது உரைக்கப்படவில்லை. எனினும், இடனுமாருண்டே' (தொல். பொருள் கoஉ) என்று அவரே கூறக் காண்கின்ரேம்.

மேலும், எதிர்மறை யேவல் விகுதியெதுவுமே தொல்காப்பியர் கூறவில்லை. எனினும் "அழியல், அஞ்சல்" (தொல். பொருள். 146. வரி. 22) என்று அவரே வழங்கக் காண்பதன்றியும், ' நிலம் பெயரினும் நின்சொற் பெயரல்' (3–14) எனப் புறநானூற்றிலும் பயிலக் காண்கின்ரேம்.

இதனல் விதந்துகூருது விடப்பட்டதொன்றை இல்லையென்பது தொல்லைதரு மென்பது வெளியாகும்.

இனிப் பிள்ளையவர்கள் முந்து நூல்களில் இல்லையென்று கூறுவன அனைத்தும் மிகப்பழை

யனவாய் அவர்கள் பேசுகிற நூல்களிலே பயின்று வருதலும் காட்டலாகும்.

அன்' விகுதி தன்மை யொருமையில் வரு தல், 'உரைத்தனன் யான்' (புறம்-136. வரி. 22), யானும்...... வந்தனன்' (புறம்-154. வரி. 6-7), ஈங்கே தலைப்படுவன்' (கலி. 64. வரி. 24) என்ப வற்றால் அறியலாம்.

மேலும் பிள்ளையவர்கள், "தொல்காப்பியர் காலத்துக் 'கள்' என்ற பன்மை விகுதி அஃ றிணைக்கு மட்டும் உரியதாயிருந்தது. உயர்திணைப் பெயர்களுக்கு இவ்விகுதி வருதல் இல்லை......இந்த வழக்கு தொல்காப்பியர் காலத்துக்குப் பின் தோன் றியதாகும்" என்று குறித்து, திருக்குறளில் 'பூரி யர்களாழுமளறு' (919) 'மறந்தார்கொல் மற்றைய வர்கள் தவம்' (263) எனக் 'கள்' விகுதி உயர் திணைப் பெயர்களோடிணைத்து வழங்கப்பட்டிருத் தலால், திருக்குறள் மிகப் பிற்பட்ட காலத்தது என்று துணிகிறார்கள்.

அவ்வாறாயின், 'கேளிர்கள் நெஞ்சழுங்க' (149. வரி. 8) என்று கலித்தொகையுள் வருதல் கொண்டு, அதுவும் அவர்கள் கருத்துக்கு மாறாகப் பிற்பட்டதாகுமே!

இவர்கள் புதுவழக்கென்றும் பிற்பட்ட வழக் கென்றும் காட்டியவற்றுள், 'மல்' விகுதி, "துறந்து தொடிநெகிழ்த்தான் போகிய கானம், இறந்தெரி நையாமல் பாஅய்முழங்கி, வறந் தென்னை செய்தியோ வானம்" (145. வரி. 18–20) எனவும், 'தத்தம் கொழுநரைப் போகாமல் காத்து'

( 109. வரி. 24, 25 ) எனவும் கலித்தொகையிலும், 'ஏல்' விகுதி, 'மருந்து பிறிதியாதும் இல்லேல்' (24. வரி, 21) எனக் கலித்தொகையிலும், பயின் றுள்ளன. இவை போல்வன பலவும் பழந்தமிழ் நூல்களுள் வருவதைப் பிள்ளையவர்கள் மறந் தார்கள்போலும் !

இனிப் பிள்ளையவர்கள் காட்டும் ஆனால், அல் லால், போழ்து எனும் புதிய சொற்களையும் ஆராய் வோம்.

ஆனல் என்பது 'ஆல்' ஈற்றுச்சொல். ஆ முத னிலை, ன் சாரியை, ஆல் வினையெச்ச ஈறு. அதை ஆ + இன் + ஆல் என்பதன் திரிபாக்கி, இன் மறைந்து ஆனல் எனக் குறைந்ததாகப் பிள்ளை யவர்கள் கொள்வது ஏனோ? இன் கெட்டால் ஆ + ஆல் என்பன மிஞ்சும். அவை கூடின் ஆவால் என்றன்றோ வரும்? ஆனல் என்பதில் இடைனகரம் உடம்படு மெய்யாகாதே? அன்றியும் விலக்கிய ஆல் விகுதி உண்டென்பது உறுதிதானே? 'ஆயர் எம ரானல்' ( 108. வரி. 9 ) என இது கலித்தொகை யினும் பயின்றுள்ளதே. அங்ஙனமிருப்பவும், அது மிகமிகப் பிற்பட்ட வழக்கெனப் பிள்ளையவர்கள் எளிதில் அறிந்ததெவ்வாறு ?

'அல்லால்' என்பது, கலித்தொகையில், வருந்தநோய் செய்திறப்பின் அல்லால்' ( 109. வரி. 21 ) என்புழிக் காணப்படுகின்றதே. அதைப் பிற் காலவழக்கென்ப தெப்படி ?

அன்றியும், "போழ்து' எனக் குறளில் வரு வது 'பொழுது' என்பதன் பிற்பட்ட வடிவம்; அத

ஞல், குறள் கி. பி. 600-இல் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்" என்கிருர்கள். இது ஊகத்தின்மேல் ஊகக் குழிப்பெருக்கல்.

பழந்தமிழ் நூல்களிலே சொற்களின் உயிரளவும் உருவும் திரிதல் பெருவழக்காய்ப் பயிலக்காண்போம். மூழ்கல், 'வீழ்தல், மூப்புஎன நெடில் முதலானவை போலவே முழுகல், விழுதல், முதுமை என்று முதலிற் குறில்பெறும் வடிவுடைச் சொற்களும் வருகின்றன. முழுகினன், விழுந்தது, முதியோர் என்பன நாமறிந்த பிற்காலச் செய்யுள்களிலும் பயிலக் காண்போம்.

அன்றியும், பிள்ளையவர்கள் பிற்கால வழக்காகக் குறித்த "போழ்து" என்பது 'எல்லிற்றுப் போழ்தாயின்' (117. வரி. 13) எனக் கலித்தொகையுள்ளும் பயிலக் காண்கின்ருேமே. அவ் வழக்குக் கொண்டு கலியும் பிற்கால நூலாதல் கூடுமே?

திருக்குறளிற் பொழுது, போழ்து என்னும் இரு சொற்களும் பயின்றுள்ளன. அகவலும் கலியுமான தொகைநூலிற் சொல்லுருவில் உயிரளவுக்கு நியதியில்லை. வெண்குறளிற் சீர்தளையின் வரையறையாற் சொல்லில்வரும் உயிரளவு இடம்நோக்கி மாற்றமடையும். பிறசான்றுகளாற் குறில் முன்வந்த சொல்லுருவங்களே பழமையுடையன என நிறுவப்பட்டாலன்றி இவ்வாதம் ஏற்கொணுது.

நெடில் முதனிலைகளே விகுதி முதலிய உறுப்புக்களையேற்கக் குறுகுதல் தமிழியல்பன்ருே! வா, தா, சா, காண் என்னும் முதனிலைகள் வந்தான், தந்தான், செத்தான், கண்டான் என முன்னின்ற

நெடில் குறுகி நிற்கின்றன. ஆதலால் 'பொழுது' எனக் குறில் முன்னின்ற சொல்லுருவே பழமை யுடையதெனல் கூடாது. எனவே, பொழுது என் பதன் பிற்பட்ட வடிவமே போழ்து எனத் துணிய ஆதரவேதும் இல்லை. அச்சொல்லாட்சியாற் குறட் காலம் கி. பி. 600 என்று ஏற்படாது

இனிப் பிள்ளையவர்கள் தமிழ்நூற் சான்றுகள் குறளுக்குத் தொன்மையை விளக்காவாதலால், தம் முடிபைப் பிறிதொருவகைச் சான்றுகளால் உறுதிப் படுத்தநினைந்து, "வடமொழிச் சொற்களையேயன்றி வடமொழிக்கருத்துக்களையும் வள்ளுவர் எடுத்தாண் டுள்ளார். அதனல், குறள் கி.பி. ஆரும் நூற்றுண் டுக்குப் பிந்தியது என்று கூறுகிருர்கள்.

இக் கூற்றை ஆராயுமுன் நாம் ஏமாருமற் கருத்தில் இருத்த வேண்டிய ஒன்றிரண்டு செய்தி களைச் சிந்திக்க வேண்டும்.

1. மிகப்பழைய சங்க காலத்திலேயே வட சொற்களைத் தமிழ்ச் சான்ருேர் விலக்காது ஏற்றுக் கொண்டுள்ளனர்.

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

என்று இடைச் சங்கத் தமிழ்நூல் கூறுகிறது. அது தென்றமிழ் நாட்டைத் திரை கொள்ளுமுன்னே வான்மீகர் அறிந்த கபாடத்தில் பாணினி நூலுக்கு முந்திய ஐந்திர நிறைந்த தொல்காப்பியர் கூறியது. கி. பி. இரண்டாம் நூற்ருண்டுக்கு முந்திய சங்கத் தொகை நூல்களில் வடசொல் வழங்காதது எதுவு மில்லை. சில வடசொற்கள் குறளில் வருவதால் அதைக் கி. பி. ஆரும் நூற்ருண்டுக்குத் தள்ளிவிட முடியாது.

2. குறட் கருத்துக்கள் சில வடமொழி நூல்களிற் காணப்படுதலாற் குறள் அவற்றுக்குப் பிற்பட்டதாய்விடாது. பல குறட் கருத்துக்கள் வடநூலொன்றில் மாறுதலின்றி இடம் பெற்ருலுமே எந்த நூல் முந்தியது என்பதை நன்ருய்ச் சான்றுகளாலே ஆய்ந்து முடிவுகட்டுவதை விட்டுக் குறளே பிந்தியதென்று கொள்வது குதர்க்கமாகும்.

இவ்வுண்மைகளை மறவாமல் நினைவிற்கொண்டு பிள்ளையவர்கள் கூறுவனவற்றை ஆராய்வோம்.

1. 'பூசனை, ஆசாரம் என்பன முதலிய ஒரு சில தனிமொழி'களும், 'ஆதிபகவன்' என்ற இருமொழித் தொடரும் குறளில் வந்துள்ளமை அனைவரும் அறிவர்'' என்கிருர்கள். அதனுல் குறளின் காலம் கி. பி. ஆரும் நூற்ருண்டாவது எப்படி ?

2. இனி, "வடமொழிச் சொற்களையேயன்றி வடமொழிக்கருத்துக்களையும் வள்ளுவர் எடுத்தாண்டுள்ளார்'' என்று கூறி, அதற்கு எடுத்துக்காட்டாகக் காமந்தகம், அர்த்த சாஸ்திரம், காமசூத்திரம் என்பவற்றில் ஒருசில கூற்றுக்களுக்கும் சிற்சில குறளுக்கும்ஏகதேச ஒற்றுமையுண்டென்று காட்டுகிருர்கள்.

கருத்துக்கள் ஒருமொழிக்கும் சொந்தமில்லை ; பலமொழியாளருக்கும் பொதுவுடைமை. ஒரு கருத்து இருமொழி நூல்களில் வருவது இயல்பு. ஒருநாட் டிருமொழிகளில் ஒத்த கருத்து வருவது அருமையன்று. பிறநாட்டுப் பலமொழி நூல்களிலும் ஒத்த ஓரு கருத்து வருவதைக் காணலாமே. அதுகொண்டு, அவற்றிடைத் தொடர்புடைமை ஊகிக்க இயலாதே. இனி, அதற்குமேல் தமிழ்க் குறளின் காலத்தை ஒத்த கருத்துள்ள வடநூற்குப் பிறகென்று கருதுதற்கு இடனுண்டோ ?

முதலில் அந்நூல்களின் காலத்தை வரலாற்று முறையில் ஆன்ற சான்று கொண்டு அளந்து அறுதியிடல் வேண்டும். பிறகு அவற்றிடை இன்றியமையாத தொடர்பியைப் துணியவேண்டும். இவையெதுவும் இல்லாமல், வடமொழி நூல்களில் வருவதெல்லாம் தமிழ்ப்பனுவல்களுக்கு மூலமுதல் என்பது விதண்டையாகும்.

பிள்ளையவர்களே தாம் கூறும் வடநூல்களின் காலம் கி. பி. 4, 5-ஆம் நூற்றுண்டுகள் என்கிருர்கள். குறள் அவற்றுக்குப் பிற்கால நூலென்று பிறசான்று காட்டி அறுதியிட்டால், அதன் பிறகு அவற்றின் தொடர்பைச் சிந்திக்கலாம். ஒரு குறளுக்கு வடநூலொன்றில் ஒரோவிடத்து ஒருபுடையொப்புமை காணுவதைக் கொண்டு, குறளை அவ் வடநூற்குப் பிந்திக் கி.பி. 600-இல் பிறந்தது எனத் துணிகிருர்கள். அதற்குப் படிப்பவரின் உடன்பாடும் உறுதியென நினைக்கிருர்கள்.

இலக்கணக் கொத்துடையாருங்கூடத் தொல்காப்பியர்க்கும் திருவள்ளுவர்க்கும் தொன்மையை மறுத்துத் தொகை நூல்களுக்கும் பிற்கால வடநூல்களுக்கும் அவரைப் பிற்பட்டவராக்கத் துணியவில்லை. வடமொழிப் பேராசிரியர் டாக்டர் சுப்பிரமணிய சாஸ்திரியவர்களும் தொல்காப்பியர் நூல் இறவாத சங்கச் செய்யுள்களுக்கு முந்தியதென்று நூற்சான்று கூறி நிறுவுகிருர்கள். அதையே, சான்று எதுவும் காணமல் கி. பி. 300-க்குப் பிற்படுத்தத் துணியும் பிள்ளையவர்கள் வள்ளுவரைக் கி. பி. ஆரும் நூற்றுண்டுக்குத் தள்ளுவதில் வியப்பென்னை ?